Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2036 தை-25 07-02-2005 திங்கட்கிழமை ஓசை -355



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி. வவுனியா.
T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987

(சி-11251)

# சிறில. ராணுவ உயரதிகாரிகளுக்கு ஹவாயில் அமெ. ராணுவம் பயிற்சி!

## இந்தியத் தரப்பு அதிருப்தி

**இலங்கை இராணுவத்தின் உயரதிகாரிகளுக்கு பயிற்சி வழங்குவதற்கு அமெரிக்கா எடுத்துள்ள முயற்சிகள் குறித்து இந்தியா தனது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ளது. ஹவாய்த்தீவில் இலங்கை இராணுவத்தின் உயர் அதிகாரிகளுக்குப் பயிற்சிகளை வழங்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது.**

இந்தப் பயிற்சிக்கென இலங்கை இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் பிரிகேடியர் ஹெந்தவிதாரனவைத் தெரிவு செய்வதற்கு அமெரிக்க தரப்பால் மேற்கொள்ளப்பட்ட கடும் முயற்சிகள் சந்தேகத்தை ஏற்படுத்துவதாக இந்திய தரப்புத் தெரிவித்துள்ளது.அமெரிக்க பயிற்சிக்காக அதிகாரிகளைத் தெரிவு செய்வதற்குஅமைக்கப்பட்ட குழு பிரிகேடியர் குலதுங்கவை சிபாரிசு செய்திருந்தது.இருந்த போதி லும் பிரிகேடியர் ஹெந்த விதார (12ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய பெற்றோலிய நிறுவனத்துடன் சந்திரிகா அரசு இரகசிய ஒப்பந்தம்

### ஐ.தே. கட்சி குற்றச்சாட்டு

இந்தியாவின் பாரத் பெற்றோலிய நிறுவனத்துடன் அரசாங்கம் இரகசிய ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. சுனாமியினால் நாடு பாரிய அழிவுக்குள்ளாகியுள்ள நிலையில் அரசாங்கம் பாரத் பெற்றோலியம் நிறுவனத்துக்கு பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் மூன்றில் ஒரு பங்கை விற்பனை செய்துள்ளதாக அந்தக் கட்சி குறிப்பிட்டுள்ளது. தாம் தனியார் மயப்படுத்தலுக்கு எதிராகச் செயற்படவில்லை என்றபோதிலும் அரசாங்கத்தின் பங்காளியாக இருக்கும் ஜே .வி.பி இந்த விடயத்தில் தமது நிலைப்பாட்டை வெளியிடா (12ஆம் பக்கம் பார்க்க)

## தேசியத்தலைவரின் படத்தை அகற்ற அதிரடிப்படைக்கு உரிமையில்லை

### -அம்பாறை மாவட்டத் தளபதி ஜனார்த்தன்

தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் உருவப்படத்தை அகற்றுவதற்கு சிறிலங்கா விசேட அதிரடிப் படையினருக்கு எவ்வித உரிமையும் இல்லை. படையினரின் இத்தகைய அடாவடித்தனங்கள் தொடருமானால் பாரிய பின் விளைவுகள் ஏற்படும் என விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட தளபதி ஜனார்த்தன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் தொடரும் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரின் அடாவடித்தனங்கள் தொடர்பாகக் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை கல்முனையிலுள்ள நலன்புரி நிலையமொன்றில் நிவாரணப் பணியில் ஈடுபட்டிருந்த பெண் போராளியொருவர் மீது படையினர் துப்பாக்கிப் பிர (12ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமி அனர்த்தம் தொடர்பில் நாளை பாராளுமன்றில் விவாதம்

இலங்கையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் தொடர்பான பாராளுமன்ற விவாதம் ஒன்று நாளை நடைபெறவுள்ளது.

சபாநாயகர் லொக்கு பண்டார தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள இந்த விவாதம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் சுனாமி அறிக்கையுடன் ஆரம்பித்து வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சுனாமியின் பின்னரான அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து கடும் வாதப்பிரதிவாதங்கள் முன் வைக்கப்படலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. (32)

## சந்திரிகா கூட்டும் கூட்டத்தை கூட்டமைப்பு பா.உகள் பகிஷ்கரிப்பு

சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட அழிவிலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்தை மீளக் கட்டியெழுப்புவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றிற்கு சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்த அழைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிராகரித்துள்ளது.

இன்று காலை 10 மணிக்கு சனாதிபதி மாளிகையில் நடைபெறவிருந்த இச்சந்திப்புக்கான அழைப்புக் கடிதம், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான ஜோசப்பரராஜசிங்கத்திடம் கடந்த வியாழக்கிழமை உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டது. இது தொடர்பாக ஜோசப் பரராஜசிங்கம் கருத்து தெரிவிக்கையில், தமிழ்ப் பிராந்திய விவகாரம் தொடர்பாக தென்னிலங்கை அதிகார (12ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமி குறித்த பாராளுமன்ற விவாதத்தில் ஜே.வி.பி கலந்துகொள்வது குறித்து முடிவில்லை

எதிர்வரும் புதன் மற்றும் வியாழக்கிழமை நடைபெறவுள்ள சுனாமி தொடர்பான பாராளுமன்ற விவாதத்தில் கலந்து கொள்வது குறித்து ஜே.வி.பியிற்குள் இருவேறு நிலைப்பாடுகள் தோன்றியுள்ளதாக தெரியவந்துள்ளது.

கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் இந்த விடயம் குறித்து ஆராயப்பட்டுள்ளது. ஜே.வி.பியின் 39 பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டதாக தெரியவருகின்றது. இதன் போது சுனாமி தொடர்பான பாராளுமன்ற விவாதத்தில் கலந்து கொள்ளாமல் விடுவதன் மூலம் அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பான தமது எதிர்ப்பினை வெளிப்படுத்த வேண்டும் என ஜே.வி.பியின் ஒரு பிரிவினர் விருப்பம் தெரிவித்துள்ளனர். இதேவேளை பாராளுமன்றத்தில் தமக்கு வழங்கப்படும் சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்தி அரசாங்க (12ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் நிவாரண உதவி எதுவும் வடமராட்சி மக்களுக்கு கிட்டவில்லை

### -கடற்றொழிலாளர் சங்கச் செயலாளர் தெரிவிப்பு

சுனாமி கடற்பேரலை அனர்த்தத் தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி மக்களுக்கு அரசாங்கத்தினால் இதுவரை எந்த விதமான நிவாரண உதவிகளும் வழங்கவில்லையென வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசச் செயலாளர் சூரிய குமாரன் கூறியுள்ளார்.

அரசாங்கம் தற்போது இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவை வழங்கி வருகிறது. அக்கொடுப்பனவை ஐயாயிரம் ரூபாவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகக் கூறுகின்றது. ஆனால் மீனவர்களைப் பொறுத்த வரை அவர்களின் தொழில்சார் உபகரணங்கள் எவற்றையும் அரசாங்கம் இதுவரை வழங்கவில்லை. இவற்றை வழங்குவதற்கும் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூரணப்படுத்துவது தொடர்பாகவும் இதுவரை அரசாங்கத்தினால் எந்தவித உதவியும் கிடைக்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் உள்ள தொண்டு நிறுவனங்களும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும், சர்வதேசத் தொண்டர் நிறுவனங்களும் இணைந்து மக்களின் அபிலாசைகளை ஓரளவு நிவர்த்தி செய்து வருவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## லிங்க நகரில் 113 குடும்பங்களை வெளியேற்ற ராணுவம் பிரயத்தனம்

திருகோணமலை மாவட்டம் லிங்கநகர் பகுதியில் வசித்து வரும் 113 தமிழ் குடும்பங்களை அங்கிருந்து வெளியேற்ற சிறிலங்கா இராணுவத்தினர் கடும் பிரயத்தனம் மேற்கொண்டு வருகின்றனர்.

இதுபற்றி பலரிடம் முறையிட்டும் எதுவித பலன்களும் கிடைக்கவில்லை. நீதிமன்றத்தில் அந்தக் காணியின் உரிமையாளர்கள் வழக்குத் தொடர்ந்தும் இதுவரை முடிவடையாத நிலையில் இருந்து வருகின்றது. அப்பகுதியில் வசித்து வருவோர் தமது வீடுகளை திருத்தியமைக்க முடியாத நிலையில் இருந்து வருகின்றனர். கூரைகள் வேய்வதற்கு கிடுகுகள் கொண்டு செல்வதற்குக்கூட இராணுவத்தினர் அனுமதியளிப்பதில்லை. 22வது படைப்பிரிவு இராணுவத்தினரின் பயிற்சி நடவடிக்கைகளின்போது சுடுகலன் தூரத்திற்குள் இப்பிரதேசம் வருவதாகக் கூறி இராணுவம் 1996ம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து மக்களை வெளியேற்றும் முயற்சிகளை மேற்கொண்டு வந்தது. அச்சத்தின் காரணமாக சுமார் 150 குடும்பங்கள் அப்போது அங்கிருந்து வெளியேறினர். வெளியிடங்களில் சென்று குடியேற முடியாதவர்கள் தொடர்ந்தும் அப்பகுதியிலேயே வசித்து வருகின்றனர். அப்பகுதியில் வசித்து வரும் அனைவருக்கும் அதே (12ஆம் பக்கம் பார்க்க)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட 58 குடும்பங்களுக்கு

# முல்லையில் தற்காலிக வீடு கையளிப்பு





முல்லைத்தீவில் கடந்த 26.12.2004 அன்று நிகழ்ந்த சுனாமிப் பேரலையின் அனர்த்தம் காரணமாக பாரிய உயிரிழப்புக்களுக்கு மத்தியில் தங்களது வாழ்வாதாரங்களை முற்றாக இழந்து, தண்ணீரூற்று றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் உள்ள நலன்புரி நிலையத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் தங்க வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்த 58 குடும்பங்களுக்கு தற்காலிகமான வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு அன்னமார் கோவிலடி எனும் இடத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஒருங்கிணைப்பில் சேவாலங்கா நிறுவனத்தால் அமைக்கப்பட்ட 58 வீடுகளும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினாலேயே பொறுப்பேற்கப்பட்டு, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நேற்று முன்தினம் மாலை 3.00 மணியளவில் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் முல்லைத்தீவு மாவட்ட சுனாமிப் பேரலையின் அனர்த்த நிவாரண, புனரமைப்பு வேலைத்திட்ட பணிப்பாளர்களில் ஒருவரான மூர்த்தி, முல்லைத்தீவு மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவரான சிவனடியார், கிராம சேவையாளர் செல்வி.சுமதி மற்றும் பெருமளவிலான பொது மக்கள் கலந்து சிறப்பித்தனர். குடியமர்த்தப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் அடிப்படைத் தேவைகளை உள்ளடக்கிய பாவனைப் பொருட்கள், சமையல் உபகரணங்கள் உட்பட உலர் உணவுப் பொருட்கள் போன்றவற்றுடன் ஆயிரம் ரூபா பணமும் மூர்த்தி அவர்களால் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு

# நெடுந்தீவு தே.எ.பேரவை உதவி

வடமராட்சிப் பகுதியில் ஆழிப் பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நெடுந்தீவு பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை உதவிகளை வழங்கியது.

நெடுந்தீவுப் பகுதி மக்களிடமிருந்து திரட்டிய உதவிப் பொருட்களை வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திடம் நெடுந்தீவுப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையாளர் அண்மையில் கையளித்தனர்.

உதவிப்பொருட்களைக் கையளிப்பு நிகழ்வுகளில் சமாசத்தின் சார்பில் உபதலைவர் குட்டித்தம்பி, செயலாளர் சூரியகுமாரும் மற்றும் சங்க பிரதிநிதிகளும், தேசிய எழுச்சிப் பேரவையின் சார்பில் செயலாளர் கணேசலிங்கம், நெடுந்தீவு பொது அழைப்புக்கள் ஒன்றியத் தலைவர் மரியாம்பிள்ளை ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

இப்பொருட்கள் வடமராட்சியில் உள்ள கடற்றொழிலாளர் சங்கங்கள் ஊடாக பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

அதேவேளை நெடுந்தீவுப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை இயற்கை அனர்த்த துயர்துடைப்பு நிதியத்துக்கு முதற்கட்டமாக இருபதினாயிரம் ரூபாவை வழங்கியது. இந்நிதியை யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை பொருளாளர் க.சிவராசா அவர்களிடம் மாவட்ட அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது. (33)

# சின்னப்பண்டி விரிச்சானில்

# வீரமுரசு எழுச்சி நிகழ்வு

சின்னப்பண்டி விரிச்சானில் நேற்று முன்தினம் வீரமுரசு நிகழ்வு இடம் பெற்றது. காலை 10.00 மணியளவில் நடைபெற்ற நிகழ்வுக்கு மன்னார் மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் இனியவன் தலைமை தாங்கினார். அத்துடன் மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் மரியநாயகம் குரூஸ், மன்னார் மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் முடியரசன் உட்பட பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் கிராம அபிவிருத்தி சம்பந்தமான விடயங்கள் ஆராயப்பட்டது. பின்னர் அதே நாளில் மாலை 6.30 மணியளவில் மாவீரர் நகுலன் நினைவாக கலை நிகழ்வுகள் இடம் பெற்றது. இந்த கலை நிகழ்வில் மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் சிறப்புரை ஆற்றினார். தொடர்ந்து பொது அமைப்புக்களின் பொறுப்பாளர் றோபட் அவர்கள் உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணிப்பாளர் அவர்கள் கிராமத்தின் வேலைத்திட்டம் சம்பந்தமான நிகழ்வுகளையும் அத்துடன் மடுப் பிரதேசப் பொறுப்பாளர் இசைச்செல்வன் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவு பெற்றது. (18)

# புனர்வாழ்வுக்கழகத்திடம் கணக்குக்கேட்க

# ஜே.வி.பி க்கு எதுவித அருகதையுமில்லை

## -ஜே.வி.பி.தமிழ் பா.உ.வுக்கு ரவிராஜ் பதில்

"வடக்குக் கிழக்குப் பகுதிகளில் சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ், முஸ்லிம் மக்களின் புனர்வாழ்வுக்கான பணிகளை மேற்கொண்டு வரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் கணக்கு கேட்பதற்கு ஜே.வி.பி யினருக்கு எந்த அருகதையும் இல்லை. எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் தெரிவித்திருக்கின்றார்.

கொழும்பிலிருந்து ஒலிபரப்பாகும் தனியார் வானொலி நிகழ்ச்சியின் விவாதமொன்றில் கலந்து கொண்ட ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரனின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கடுமையாகக் கூறினார்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்த விவாதத்தில் சுனாமிக்குப் பின்னரான புனர்வாழ்வு நடவடிக்கைகள் தொடர்பாக முக்கியமாக ஆராயப்பட்டது. இதில் கருத்து வெளியிட்ட ரவிராஜ, 'தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் கணக்கு கேட்பதற்கு ஜே.வி.பி யினருக்கு எந்த அருகதையும் இல்லை. ஏனெனில் அவர்கள் வேறுபல கணக்குகள் காட்ட வேண்டியிருக்கிறது. அதனை இறுதியாக சவால்களை உங்களுக்கு முன்வைக்க விரும்புகின்றேன். எனத் தெரிவித்தார். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நேற்று இன்றல்ல. கடந்த 15 வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்கள் மத்தியில் பணிபுரிந்து வந்திருக்கின்றது. யாழ்ப்பாணத்திற்கு சிங்கள அரசுகள், சிங்கள பேரினவாதிகள் பனடோல் வில்லைகளைக் கூட அனுப்பாத நிலையிலேயே, தமிழ் மக்கள் வாடி வதங்கிய அந்த நேரத்திலேயே அவர்களைப் பாதுகாத்தவர்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகம்தான். எனவும் ரவிராஜ் குறிப்பிட்டார். இச்சந்தர்ப்பத்தில் குறுக்கிட்டு 'அன்று பொருளாதாரத் தடை விதித்தவர்கள் அன்றைய ஐ.தே.க. அரசாங்கம்' என ஜே.வி.பி யின் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன் கூறிய போது, ரவிராஜ் அதற்கும் கடுமையாகப் பதிலளித்தார். 'தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஐக்கிய தேசியக் கட்சியும் சரி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் சரி, ஜே.வி.பியும் ஒன்றுதான். நீங்கள் அனைவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள். நாம் யாருக்கும் அடிபணிந்தவர்கள் அல்ல என்பதனையும் உங்களுக்கு கூறிக்கொள்ள விரும்புகிறோம். நாம் யாரிடமும் கையேந்திப் பிழைப்பவர்கள் அல்ல. நீங்கள் அனைவரும் ஒரே குட்டையில் ஊறிய இனவாத மட்டைகள். அவர்களுக்கு நாம் சரியான பாடத்தைப் படிப்பிப்போம்' என ரவிராஜ் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது: 'இன்று தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைப் பற்றி பேசுகிறீர்கள். உங்களுக்கு ஒன்றை கூறிக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் கணக்கு கேட்கிறீர்கள். இந்நாட்டு மக்கள் உங்களிடம் சில கணக்குகள் கேட்க விரும்புகிறார்கள். முதன் முதலாக இந்நாட்டில் ஆயுதத்தை ஏந்திப் போராடியவர்கள் நீங்கள். 71ஆம் ஆண்டு சொந்த மக்களையும், அரச படைகளையும் கொன்று குவித்தவர்கள் நீங்கள். 88, 89, 90ஆம் ஆண்டு காலப்பகுதியில் துண்டுப் பேப்பரை அனுப்பி இந்திய பருப்பு சாப்பிட்டவர்களைக் கொன்று குவித்தவர்கள். நீங்கள். உங்களைக் கேட்க விரும்புவது இதுதான். இன்று நீங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பார்த்து ஏந்திய ஆயுதங்களை கீழே வைக்க வேண்டும் என்று கூறுகிறீர்கள். இன்று வரையில் நீங்கள் வைத்திருந்த ஆயுதங்களை உத்தியோக பூர்வமாக ஒப்படைத்திருக்கின்றீர்களா? உங்களிடம் இருந்த ஆயுதங்களின் தரங்கள், உங்களிடமிருந்து ஆயுதங்களின் பட்டியல்களை இன்றுவரை வெளியிட்டிருக்கின்றீர்களா? உங்களால் கொள்ளையிடப்பட்ட வங்கிகள் எவ்வளவு? அங்கே எவ்வளவு தொகைப் பணம் கொள்ளையிடப்பட்டது? எவ்வளவு கிலோ தங்கம் கொள்ளையிடப்பட்டது? அப்பாவி மக்கள் அடகுவைத்த நகைகள் கொள்ளையடித்த விபரத்தை வெளியிட்டிருக்கின்றீர்களா? உங்களால் கொல்லப்பட்ட அரசியல்வாதிகளுடைய பெயர்களை நீங்கள் வெளியிட்டிருக்கின்றீர்களா? ஏன் நீங்கள் இன்று சந்திரிகா அம்மையாரின் சேலையில் தொங்கிக் கொண்டிருக்கின்றீர்கள். அவரின் கணவரைக் கொன்றவர்கள் கூட நீங்கள்தான். உங்களால் கொல்லப்பட்ட அப்பாவி மக்களின் பட்டியலை முதலில் வெளியிடுங்கள். கொழும்பு மாவட்ட பிரதி மேயர் அசாத் அலி கூறியது போன்று, ஒவ்வொருவரின் வீடு வீடாகச் சென்று நீங்கள் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுங்கள். உங்களுடைய கட்சி இன்று வரை இத்தகைய தகவல்களை வெளியிடவில்லை. ஆகவே நீங்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் கணக்குக் கேட்காதீர்கள். 'இவ்வாறு ரவிராஜ் தெரிவித்தார்.

# நான்கு இல.தமிழர்கள்

# இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பினர்

இந்தியா திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள அரியமுத்து ஆணையூர் அகதி முகாமில் வசித்த நான்கு இலங்கை வாழ் தமிழர்கள் தலைமன்னார் ஊடாக தாயகம் திரும்பியுள்ளனர். இந்த நாலு பேரையும் கடந்த 30 ஆம் திகதி இந்தியா இராமேஸ்வரத்தில் இருந்து இந்திய மீன்பிடிப் படகு மூலம் ஏற்றி திடை என அழைக்கப்படும் மணல் மேட்டில் இறக்கிவிடப்பட்டு மூன்று நாட்களுக்கு பின்னர் உணவின்றி கடந்த 2 ஆம் திகதி அவ்வழியாக வந்த சிறிலங்கா கடற்படையினரின் படகில் ஏறி தலை மன்னார் வந்தடைந்துள்ளனர். அவர்களை தலைமன்னார் பொலிசார் மூலம் மன்னார் நீதிமன்றத்தில் 04 ஆம் திகதி அன்று முன்நிறுத்தப்பட்டுள்ளனர். அவர்களை மன்னார் நீதிபதி எம்.அப்துல்லா அவர்களின் உத்தரவின் பேரில் அவர்களின் சொந்த இடமான உயிலங்குளம், செட்டிகுளம், முள்ளிக்குளம் போன்ற இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (18)

# யுத்தத்தால் விதவையாகியுள்ள பெண்கள்

# பொருளாதார ரீதியாகப் பின்னடைவு

## -அரச சார்பற்ற அமைப்புகளின் ஆய்வுகள் தெரிவிப்பு

(வடமராட்சி)

யாழ். குடாநாட்டில் கடந்த கால யுத்த அனர்த்தங்களினாலும், பிற காரணங்களினாலும் விதவைகளாகியுள்ள கிராமப்புற பெண்கள் பெரிதும் பொருளாதார ரீதியாகப் பின்னடைவுகளைத் தொடர்ந்து சந்தித்து வருவதாக கண்டறியப்பட்டுள்ளது. இதனால், அவர்களது குழந்தைகள் பெரும்பாலும் போசாக்கின்மைக்கு உள்ளாகியிருப்பதாகவும், இவர்கள் கல்வி வாய்ப்பினை இழந்து வருவதாகவும் யாழ். மாவட்ட அரச சார்பற்ற அமைப்புக்களின் இணையம் அண்மையில் மேற்கொண்ட ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

கடைசியாக எடுக்கப்பட்ட புள்ளி விபரங்களின்படி இரண்டு தசாப்த காலமாக தொடர்ந்த யுத்த நடவடிக்கைகளாலும், பிற காரணங்களினாலும் குடாநாட்டைச் சேர்ந்த 26 ஆயிரத்து 743 பெண்கள் விதவைகளாகியுள்ளனர். இவர்களில் 15ஆயிரத்து 700 விதவைகளிற்கு அரசினால் மிகச் சிறிய அளவிலான உதவிக் கொடுப்பனவு மட்டும் வழங்கப்பட்டு வருகின்றது.

எனினும், இவ்வுதவிக் கொடுப்பனவு அக்குடும்பங்களிற்குப் போதாது இருப்பதுடன், விதவைகளாகியுள்ள எஞ்சிய 41 வீதமான பெண்களிற்கு எந்தவொரு உதவியும் கிட்டியிருக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, விதவைகளாகியுள்ளோரில் 40 வீதமானவர்கள் 50 வயதிற்கும் குறைவான வயதுடைய பெண்களெனத் தெரிவிக்கும் அரச சார்பற்ற அமைப்பு வட்டாரங்கள் இவர்களில் பெரும்பாலானோர் தொடர்ந்தும் தமது பிள்ளைகளின் கல்வி மற்றும் உணவுத் தேவைகளை நிறைவு செய்வதில் பெரும் கஷ்டங்களையும் சவால்களையும் சந்தித்து வருவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவிக்கப்படுகிறது. (27)

# ஈராக்கில் மூன்று குண்டு வெடிப்புக்கள்
# 3அமெ.படையினர், 4 ஈராக் படையினர் பலி

(பாக்தாத்)

ஈராக்கில் உள்ள பைஜி நகரில் நேற்று முன்தினம்இரு இடங்களில் அடுத்தடுத்துக் குண்டுகள் வெடித்தன. இதில் அமெரிக்க வீரர்கள் மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளதோடு, 12 பேர் காயம் அடைந்தார்கள். இவர்களையும் சேர்த்து ஈராக்கில் பலியான அமெரிக்க வீரர்களின் எண்ணிக்கை 1107 ஆக உயர்ந்துள்ளது.

பஸ்ரா நகரில் நடந்த மற்றொரு குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஈராக் வீரர்கள் நான்கு பேர் பலியானார்கள். மூன்று பேர் காயமடைந்தனர்.

# அமெரிக்க இராணுவத்துக்கு நிதி ஒதுக்கீடு ரூ.20 லட்சம் கோடி

(வோஷிங்டன்)

அமெரிக்க இராணுவத்துக்கு 2006 ஆம் ஆண்டுக்காக 20 இலட்சம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பாராளுமன்ற அனுமதியை அடுத்த வாரம் சனாதிபதி புஷ் கோருகிறார். இது நடப்பு ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டை விட 4 சதவீதம் அதிகம் ஆகும்.

ஈராக், மற்றும் ஆப்கானிஸ்தான் நாடுகளில் நடத்தப்படும் இராணுவ நடவடிக் கைகளுக்கான செலவு இதில் அடங்காது.அணு ஆயுதத் திட்டத்துக்கான செலவும் இதில் அடங்காது. அந்தச் செலவை அணு சக்தி துறை ஏற்றுக்கொண்டுள்ளது.

# நேபாள மன்னர் அதிரடி நடவடிக்கை; 4 முன்னாள் மந்திரிகள் திடீர் கைது

*–லஞ்ச புகார் பற்றி விசாரிக்க ஆணைக்குழு அமைப்பு*

(காத்மண்டு)

**நேபாளத்தில் முன்னாள் மந்திரிகள் நான்கு பேர் கைது செய்யப்பட்டனர். அரசியல் வாதிகள் மீதான லஞ்ச புகார்களை விசாரிக்க ஆணைக்குழு அமைக்கவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.**

நேபாளத்தில் பிரதமர் ஷெர் பகதூர் தேபா தலைமையில் இருந்த இடைக்கால ஆட்சியை மன்னர் ஞானேந்திரா கடந்த முதலாம் திகதி கலைத்தார். அதைத் தொடர்ந்து நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்டது. அரசியல் கட்சித் தலைவர்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்கள். ஆட்சிப் பொறுப்பை மன்னர் ஞானேந்திராவே ஏற்றுக் கொண்டார். அதோடு தனக்கு விசுவாசமாக இருக்கும் பத்துப் பேரை மந்திரிகளாக நியமித்தார்.

இந்த நிலையில் ஷெர் பகதூர் தேபா மந்திரி சபையில் இடம்பெற்றிருந்த முன்னாள் மந்திரிகள் பிரகாஷ் மான்சிங் (திட்டம்), ஹோம்நாத் தாகால் (விவசாயம்), பிமாலேந்தரா நிதி (கல்வி) பிரகாஷ்மகாத் (வெளியுறவு) ஆகிய நான்கு பேரும் திடீரென்று நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலைநகர் காத்மண்டுவில் தேபேயின் நேபாள காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் ரகசியக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டது தெரிந்ததே.

இதற்கிடையில் நேபாள புதிய மந்திரி சபையின் முதல் கூட்டம் மன்னர் ஞானேந்திரா தலைமையில் நடைபெற்றது. பல்வேறு புதிய நடவடிக்கைகள் எடுப்பது பற்றி விவாதிக்கப்பட்டது.

அரசியல்வாதிகள் மற்றும் தொடர்புடையவர்கள் மீதான லஞ்ச புகார்களை விசாரிக்க ஆணைக்குழு அமைப்பது என்று கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. கடத்தல் மற்றும் வரி ஏய்ப்பு மூலம் பலர் சொத்துக்கள் குவித்து இருப்பதாகவும், அது பற்றி இந்த ஆணைக்குழு விசாரணை நடத்தும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. அதிகார துஷ்பிரயோகம் செய்த விவகாரங்கள் பற்றியும் விசாரிக்கப்பட இருக்கிறது. ஆணைக்குழு இன்னும் 15 நாட்களில் அமைக் கப்படும் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது. நிர்வாகச் சீரமைப்பு உட்பட 21 அம்சத் திட்டங்களை நிறைவேற்றுவது என்றும் மந்திரி சபைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. நிலம் இல்லாத மக்களுக்கு நிலம் உடனடியாக வழங்கப்படும் என்பது அந்த 21 அம்சத் திட்டங்களில் ஒன்றாகும்.

இதேவேளை வீட்டுக் காவலில் இருக்கும் அரசியல் தலைவர்கள் விடுதலை செய்யப்பட இருக்கின்றார்கள். இது பற்றி இராணுவ செய்தித் தொடர்பாளர் தீபக் குருவ் கூறுகையில், அரசியல் கட்சித் தலைவர்கள் பலர் வீட்டுக் காவலிலும், சிறையிலும் இருக்கிறார்கள். விரைவில் அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்றார்.



மனித உரிமை மீறல் தொடர்பான வழக்கில் நட்ட ஈடு வழங்குமாறு நீதிமன்று தீர்ப்பளித்ததையடுத்து பிலிப்பைன்சின் முன்னாள் அதிபர் பேர்டினன் மாகோஸிசும், மனைவியும் ஆதரவாளர்களுடன் வெற்றிக்களிப்பில் காணப்படுகின்றனர்.




நோய்வாய்ப்பட்டிருந்து பின்னர் குணமடைந்த பாப்பரசர் 2ஆம் ஜோன் போல் வத்திக்கானில் மக்களுக்கு வழங்கிய உபதேசத்தை அவதானிக்கும் வத்திக்கான் மருத்துவக் கல்லூரி மாணவர்கள்.

# விளக்குத் திருவிழாவில் மனித தோரணங்கள்

(கோலாலம்பூர்)

சீனாவின் புத்தாண்டு வருகிற ஒன்பதாம் திகதி தொடங்குகிறது. மலேஷியா, சிங்கப்பூர், ஜப்பான், தாய்வான் உட்பட சில நாடுகளிலும் ஒன்பதாம் திகதி தான் லூனார் புத்தாண்டு தொடங்குகிறது. இதையொட்டி இந்த நாடுகளில் கோலாகல கலை நிகழ்ச்சிகள் நடக்கின்றன.



விளக்குத் திருவிழாவும் இதையொட்டித் தொடங்கியுள்ளது. மலேஷியாவின் கோலாலம்பூர் நகரில் விளக்குத் திருவிழாவில் சீனாவைச் சேர்ந்த சர்க்கஸ் கலைஞர்கள் உயரமான கம்பத்தில் வரிசையாக ஏறி நின்று தோரணம் போலசாக சங்களையும் செய்யத் தயாராகி வருகின்றனர்.

# ஈராக் அபுகிறைப் சிறையில் சித்திரவதை மேலுமொரு அமெ.வீரருக்கு சிறைத்தண்டனை

ஈராக்கின் அபுகிறைப் சிறைச்சாலையில் கைதிகளை சித்திரவதை செய்த அமெரிக்கப் படையின் மேலும் ஒருவருக்கு ஆறுமாத சிறைத் தண்டனை வழங்கி இராணுவ நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

ஈராக்கிலுள்ள அபுகிறைப் சிறையில் கைதிகள் சித்திரவதை செய்யப்பட்டது. தொடர்பாக அமெரிக்க வீரர்கள் மீது இராணுவ நீதிமன்றில் விசாரணை நடைபெற்று வருகிறது. இந்தப் புகாரில் சிக்கிய ஜாவல் டேவிஸ் (வயது27) என்ற இராணுவ வீரருக்கு ஆறு மாத சிறைத் தண்டனை விதித்து கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்று தீர்ப்பளித்தது. முன்னதாக இராணுவ நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டார். அந்தச் செயலுக்காக நான் மிகவும் வருந்துகிறேன். திறமையான இராணுவ வீரனாக இருக்க நான் தகுதியற்றவன் என்று ஜாவல் டேவிஸ் தெரிவித்தார். இந்தச் சித்திரவதை குற்றச்சாட்டுக்கு தண்டனை பெற்றுள்ள ஆறாவது வீரர் இவர் ஆவார்.

# பொது இடத்தில் முத்தம் கொடுத்தால் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை

-இந்தோனேஷியாவில் சட்டம் வருகிறது

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவின் கலாச்சார அழிவைத் தடுக்கும் நோக்கில் பொது இடங்களில் காதலர்கள் முத்தம் கொடுப்பதைத் தடை செய்யும் சட்டம் அந்த அரசினால் கொண்டுவரப்படவுள்ளது.

இந்தோனேஷியாவில் நூற்றுக்கணக்கான குட்டித் தீவுகள் உள்ளன. உலக நாடுகளில் இருந்து லட்சக் கணக்கான சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இந்தோனேஷியா உலகிலேயே அதிக முஸ்லிம்கள் வாழும் நாடு. ஆனாலும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை அதிகமாகி வரும் இந்தோனேஷியாவில் மேற்கத்தேய நாடுகளின் நாகரீக மோகமும், பழக்க வழக்கங்களும் அதிகரித்து வருகிறது. அந்த நாட்டின் கலாச்சாரமே காணாமல் போய் விடுமோ என்ற கேள்விக்குறியும் எழுந்துள்ளது.

வெளிநாட்டில் இருந்து சுற்றுலா வரும் காதலர்களும் புதுமண ஜோடிகளும் பொது இடத்தில் கட்டிப் பிடித்து முத்தம் கொடுக்கிறார்கள்.

இந்த முத்த கலாசாரத்துக்குத் தடை விதிக்க இந்தோனேஷிய அரசு முடிவு செய்துள்ளது. அதற்கான தடைச்சட்டம் வருகிறது. இந்தத் தடைச் சட்டத்தின் வரைபு நகல் தயாராகி விட்டது. பாராளுமன்றத்தில் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு அதன் மீது விவாதம் நடத்தி அது நிறைவேற்றப்படும்.

இந்தச் சட்டத்தின்படி பொது இடத்தில் பலர் முன்னிலையில் கட்டிப்பிடித்து முத்தம் கொடுக்கும் ஜோடிகளுக்கு 10 ஆண்டு சிறைத் தண்டனை கிடைக்கும். அது மட்டுமன்றி 33 ஆயிரம் டொலர் அபராதமும் விதிக்கப்படும். திருமணம் ஆன ஜோடிகளுக்கும் இதில் விதிவிலக்குக் கிடையாது என அறிவிக்கப்பட்டுள்ளது.






தாய்லாந்தில் நடைபெற்ற தேர்தலின் போது சுனாமி பாதிப்பிற்குள்ளான கிராமமொன்றில் வாக்களிக்கக் காத்திருக்கும் மக்களையும், வாக்குகள் எண்ணும் நிலையத்தில் அவை பிரிக்கப்படுவதையும் காண்க.

# வீதிப் போக்குவரத்து விதிமுறைகளை கட்டாயம் வாகன ஓட்டுனர்கள் பின்பற்றி நடக்கவேண்டும்

## வீதிப்போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் அறிவுறுத்து



(அலுவலக செய்தியாளர்)

**தற்போது நடைமுறைக்குட்படுத்தப் பெற்றுள்ள வீதிப் போக்குவரத்து சட்ட விதிகளை சகல வாகன ஓட்டுனர்களும் பின்பற்றி வீதிப்போக்குவரத்து விதி முறைகளுக்கமைவாக சாரத்தியத்தினை மேற்கொள்ளுமாறு தமிழீழ காவல்துறை வீதிப்போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சி.சிவகுமாரன் சகல வாகன ஓட்டுனர்களையும் கேட்டுக்கொண்டுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில் ; சாரதிகளின் கவலையீனம் காரணமாக அண்மைக்காலங்களில் நடைபெற்ற வீதி விபத்துக்கள் குறித்து யாவரும் அறிவீர்கள். இவ்வீதி விபத்துக்களைத் தவிர்த்து எமது மக்களின் உயிர் உடமைகளைக் காப்பாற்றும் பாரிய பொறுப்பு காவல் துறையாகிய எமக்குண்டு. வீதி விதிமுறைகளை மீறி சாரத்தியம் செய்யும் வாகன ஓட்டுனர்கள் மீது எம்மால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப் பெற்று வருகின்றது. மேற்படி நடவடிக்கையில் நீதி நிர்வாகத்துறையின் சட்டவாக்கப் பிரிவால் திருத்த விதிகள் மேற்கொள்ளப் பெற்று நேற்று முன்தினம் முதல் நடைமுறைப்படுத்தப்பெற்று வருகின்றது.

நடைமுறைக்கு வந்துள்ள மேற்படி தமிழீழ வீதிப்போக்குவரத்து திருத்தச்சட்டத்தினை சகல வாகன ஓட்டுனர்களும் கடைப்பிடித்து எம்மால் மேற்கொள்ளப் பெற்று வரும் நடைமுறைகளுக்கு ஒத்தாசை நல்கி மக்களின் உயிர்களையும், உடமைகளையும் காப்பாற்றும் வகையில் சாரத்தியத்தினை கடைப்பிடிக்குமாறும் வேண்டியுள்ளார். (சோ)

## பாதிக்கப்பட்டோருக்கு உதவ நிதிவழங்கல்

(புதுக்குடியிருப்பு)

முல்லை மாவட்டத்தில் சுனாமி கடற் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு துயர் துடைக்கும் நோக்குடன் ஜேர்மனியில் இருந்து ரவிந்திரராஜா- வரதலட்சுமி என்பவா இலங்கையில் இருக்கும் கௌரி அம்பாள் என்பவர் மூலம் 63,162 ரூபாவை முல்லை மாவட்ட தேசிய எழுச்சி பேரவையில் துயர் துடைக்கும் நிதிக்கு இலங்கை வங்கியில் வைப்பில் இட்டுள்ளார். (08)

## கற்றலுக்கு உதவி

(மன்னார்)

பெற்றோர்களை இழந்த சிறுவர்களின் நலன் கருதி மன்னார் துயர் துடைப்பு சங்கம் சிறுவர்களின் கல்வித்திறனுக்கு ஏற்ப ஒருதவணைக்கு ஒரு தொகை கொடுப்பனவும் அப்பியாசக் கொப்பிகளும் வழங்கியுள்ளது.

2005 ஆம் ஆண்டுக்கான இந்த கொடுப்பனவு கடந்த புதன் கிழமை மன்னார் துயர் துடைப்பு சங்கத்தில் வைத்து இச் சங்கத்தின் தலைவ ரால் வழங்கப்பட்டது.

## கரையொதுங்கும் பொருட்களை உணவுக்குப் பயன்படுத்த வேண்டாம்

(திருமலை)

சுனாமி கடலனர்த்தத்தைத் தொடர்ந்து தற்போது பல பொருட்கள் கரையொதுங்கி வருகின்றன இவ்வாறு கரையொதுங்கும் பொருட்களை உணவுத் தேவைக்காகப் பயன்படுத்த வேண்டாமென பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஏராளமான தேங்காய்கள், மரப்பலகைகள் திருகோணமலையில் கரை ஒதுங்குகின்றன. வெளிநாடுகளிலிருந்து இவை கடலலைகளால் இழுத்து வரப்படுவதாக தெரிகின்றது. கடற் கோளை அடுத்தே தேங்காய்கள் கடலில் மிதந்து இறுதியில் திருமலைக் கரையில் ஒதுங்குகின்றன. இவ்வாறு கரையில் ஒதுங்கும் தேங்காய் களை பாவிக்க வேண்டாம் என்று சுகாதாரப்பகுதியினர் மக்களை ஒலிபெருக்கி மூலம் கேட்டுள்ளனர். (25)



கிளிநொச்சி ஏ.9 பிரதானசாலையிலிருந்து பரவிப்பாஞ்சான் பகுதிக்கு திரும்பும் சந்திக் கருகிலுள்ள கழிவு வாய்க்காலில் கழிவு நீரும் குப்பை, கூழங்களும் அகற்றப்படாது துர்நாற்றமெடுத்த நிலையில் உள்ளதனை படத்தில் காணலாம். (படம் சோதி)

## உருக்குலைந்த சடலமொன்று திருமலைக் கரையில் ஒதுங்கியது

-சுனாமியால் இறந்த வெளிநாட்டவருடையது என ஊகம்

(திருகோணமலை)

உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று நேற்று முன்தினம் மாலை திருகோணமலை பள்ளத் தோட்டம் கடற்கரையில் ஒதுங்கியது. பன்னிரண்டு வயது சிறுமியினுடையதாக அச்சடலம் இருக்கலாம் என்று கூறப்பட்டது. கடற்கோளில் சிக்கி மரணமான வேறொரு நாட்டைச் சேர்ந்தவரின் சடலமாக அது இருக்கலாம் என்று பொலிஸ் மற்றும் வைத்திய வட்டாரங்கள் கருதுகின்றன. யாருடையது என்பதைக் கண்டு பிடிப்பதற்காக டி.என்.ஏ மரபணுச் சோதனைக்கு சடலத்தை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (25)

## கடலில் மிதக்கும் பொருட்களால் தொழிலில் ஈடுபடும் மீனவர் அச்சம்

(புதுக்குடியிருப்பு)

சுனாமி அனர்த்தத்தின் விளைவாக முல்லைத்தீவு கடற்கரையிலிருந்து கடலினால் அள்ளிச் செல்லப்பட்ட மரங்கள் மற்றும் பொருட்கள் கடலில் மிதப்பதால் எஞ்சிய சிறு உபகரணங்களைக் கொண்டு தமது மீனவத் தொழிலை மேற்கொண்டுவரும் தொழிலாளர்கள் பெரும் சிரமத்துக்குள்ளாவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் தமது படகுகளைக் கொண்டு தொழிலுக்காகச் செல்கின்ற வேளை இப் பொருட்கள் தமது படகுகளில் மோதி சேதம் ஏற்படுத்தக் கூடும் எனவும் அச்சம் தெரிவித்துள்ளனர். இவற்றைக் கவனிக்காது விட்டால் பாரிய ஆபத்து நேரிடும் என மீனவர்கள் அஞ்சுகின்றனர்.(08)

## மன்னாரில் பொருண்மிய மதியுரையகத்தினால் தகவல் தொழில்நுட்ப கணினிப் பயிற்சி நிலையம் திறப்பு

பொருண்மிய மதியுரையகத்தின் மன்னார் மாவட்டக்காரியாலயத்தினால் கடந்த சனிக்கிழமை பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள் படித்த இளைஞர், யுவதிகளின் நன்மை கருதியும் தகவல் தொழில்நுட்ப கணினி கற்கை நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

மாவட்ட இணைப்பாளர் கி.பிரபா தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்டப் பணிப்பாளர், உதவி வலயக்கல்விப் பணிப்பாளர், கெயா[illegible] பிரதிநிதி, பாடசாலை அதிபர்கள் [illegible]னைய அரச சார்பற்ற நிறுவன[illegible]களின் பிரதி நிதிகள் , தமிழீழ [illegible]ணவர் அமைப்பு, மாவட்டப் பொறுப்பாளர், பாடசாலை மாணவர்கள் இளைஞர், யுவதிகள், பொது மக்கள ஆகியோர் கலந்து கொண்டனர்.

தேசியக் கொடியினை அடம்பன் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் காஞ்சனன் ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து அகவணக்கம் இடம் பெற்றது. அடுத்து கணினிப்பயிற்சி நிலையத்தின் பெயர்ப்பலகையினை தமிழர் புனர்வாழ்வுக்கழக மன்னார் மாவட்டப்பணிப்பாளர் கேசவன் திரை நீக்கம் செய்து வைத்தார், பின்னர் கணினி கற்கை நிலையத்தினை மடு வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜேசுதாஸ் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார், அடுத்து ஆண்டாங்குளம் றோ.க.த.க. பாடசாலை அதிபர் விஸ்வராஜா கணினியினை இயக்கி கணினிப் பயிற்சியினை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்தார், அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற அரங்க நிகழ்வில். மாவட்ட இணைபபாளர் அவர்கள் தலைமை உரை ஆற்றும் போது அழைப்பை ஏற்று வருகை தந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்ததோடு பொருண்மிய மதியுரையகத்தின் ஆரம்பம், அதன் நோக்கங்கள், அதன் செயற்பாடுகள் பற்றி விளக்கிக் கூறியதுடன் கணினி நிலையத்தை ஆரம்பித்து வைத்த காரணத்தை எடுத்துக் கூறினார். வள்ளுவரின் கூற்றை மேற்கோள் காட்டி உரையாற்றிய அவர், உலகத்தோடு ஒத்த கல்வியே அவசியமாகும். அந்த வகையில் கணினி அறிவு இன்றியமையாததாகும். உலகம் இன்று கணினி அறிவில் இரண்டு தசாப்தங்கள் முன்னணியில் இருக்கின்றது. நாம் கணினி அறிவில் இரண்டு தசாப்தங்கள் பின் நிற்கின்றோம் எனவே நாம் கணினித் துறையில் உலகத்துடன் போட்டி போடக் கூடிய வகையில் கணினியை வேகமாகக் கற்கவேண்டியுள்ளது என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார். அதனைத் தொடர்ந்து உரையாற்றிய தமிழர் புனர்வாழ்வுக்கழக மன்னார் மாவட்டப்பணிப்பாளர் அவர்கள் தமது உரையில் பொருண்மிய மதியுரையகத்தின் செயற்பாடுகள் பற்றி பாராட்டி பேசியதுடன் கணினி பயிற்சிநெறி காலத்தின் கட்டாய தேவையாகும் அந்த வகையில் தேவையை அறிந்து கணினி நிலையத்தை ஆரம்பித்து வைத்தது மிகவும் பொருத்தமான விடயமாகும். கணினித்துறையில் கணினி மென்பொருள் உருவாக்கும் வகையில் நாம் வளர வேண்டும் எனவும் கேட்டு இப்பயிற்சி நிலையம் மென்மேலும் வளர தனது ஆசிகளைக்கூறி தனது உரையை நிறைவு செய்தார். அடுத்து உரையாற்றிய கெயார் நிறுவன உத்தியோகத்தர் கணேசலிங்கம் நிகழ்வுக்கு அழைத்ததற்கு நன்றி தெரிவித்ததோடு பொருண்மிய மதியுரையகத்துடன் தாங்கள் இணைந்து முன்னர் செயற்பட்டதை நினைவு கூர்ந்ததுடன் எதிர்காலத்திலும் இணைந்து செயற்படவுள்ளதாகவும் குறிப்பிட்டு தனது உரையை நிறைவு செய்தார். இறுதியாக உரையாற்றிய சிக்மா கணினிப் பயிற்சி நிலையத்தின் பொறுப்பாளர் கணினி பற்றி விரிவான விளக்கத்தை அளித்ததுடன் கணினித்துறையில் வேலை வாய்ப்புப் பற்றியும் எடுத்து கூறியதுடன் கணினிக்கல்வியில் மென்மேலும் வளர வேண்டும் எனவும் கேட்டு நிறைவு செய்தார்.

## அடையாள அட்டை வழங்க விரைவில் நடமாடும் சேவை

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரையோரக் கிராமங்களில் இடம் பெற்ற சுனாமி கடற்கொந்தளிப்பு காரணமாக தேசிய அடையாள அட்டைகளைத் தவற விட்டவர்கள் அடையாள அட்டையை பெற்றுக் கொள்ளும் நோக்குடன் இலங்கையில் ஆட்பதிவுத் திணைக்களத்தால் நடமாடும் சேவை ஒன்று இடம் பெறவுள்ளது என தெரியவந்துள்ளது.

இந்தத் தகவலை இலங்கையின் ஆட்பதிவுத் திணைக்களம் உதவி அரசாங்க அதிபர்களுக்கு அறிவித்துள்ளது. (08)



லண்டன் எஸ்.ஆர்.சி.ஜி. நிறுவனத்தினர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மருந்துவ உபகரணங்களுக்கென 15 இலட்சம் ரூபாவினை வழங்கியுள்ளனர். இந்நிதியினை நிறுவனக் கணக்காளர் பி.சாந்தி கிளிநொச்சி மருத்துவ சங்கத்திடம் கையளித்தார்.அத்துடன் கடந்த வியாழனன்று அவர் வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட இரத்தவங்கியை வைபவரீதியாக நாடாவை வெட்டித்திறந்து வைத்தார். (படம். சோதி)

# யாழ்.பல்கலையிலிருந்து மருத்துவர்களாக வெளியேறுவோர் வடக்கு கிழக்கில் பணியாற்ற முன்வராமை துரதிர்ஷ்டவசமானது

- வல்வெட்டித்துறை வைத்திய அதிகாரி மயிலேறும் பெருமாள் கவலை

(யாழ்ப்பாணம்)

**யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தில் கல்விகற்று மருத்துவர்களாக வெளியேறுவோர் தமிழர்தாயகமான வடக்கு,கிழக்குப் பிரதேசங்களில் சேவையாற்ற முன்வராமை துரதிர்ஷ்டவசமானது என வடமராட்சி- வல்வெட்டித்துறை வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி மயிலேறும் பெருமாள் கவலை தெரிவித்துள்ளார்.**

. யாழ். குடாநாட்டில் காணப்படும் மாவட்ட மற்றும் பிராந்திய, கிராமியவைத்தியசாலைகள் உட்பட வடக்குக்கிழக்கு பிரதேச சங்கங்களிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் நிலவும் வைத்தியர்கள் பற்றாக்குறை பற்றிக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கிலுள்ள வைத்திய சாலைகளில் கடமையாற்றுவதற்கு போதியளவு வைத்தியர்கள் வருடாந்தம் யாழ்.பல்கலைக் கழகத்திலிருந்து பட்டதாரிகளாக வெளியேறுகின்றனர்.

இவ்வாறு வெளியேறுபவர்கள் 99வீதமானவர்கள் வடக்கு கிழக்குப்பிரதேசத்தவர்களாக இருப்பினும் இவர்கள் தம் தாயகப்பகுதிகளில் சேவையாற்ற விரும்பாது வெளிநாடுகளில் சென்று வேலைபார்க்கின்றனர்.

இதனால் வடக்கு கிழக்கு மக்கள் எதுவித பயனையும் அடைவதில்லை இதனால் ஓய்வு பெற வேண்டிய வைத்தியர்கள் பலர் இன்னமும் சேவையில் உள்ளனர் எனவே இந்நிலைமை மாறவேண்டும் எனவும் வைத்திய அதிகாரி மயிலேறும் பெருமாள் வலியுறுத்தியுள்ளார். (33)

## மண்வெட்டி வழங்கக்கோரல்

யாழ். வலிகாமம் மேற்கு விவசாயிகளுக்கு கமநலசேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும் தோட்ட மண்வெட்டிகள் கடந்த வருடம் விநியோகிக்கப்படவில்லை யென விவசாயிகள் தரப்பிலிருந்து தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதி விவசாயிகளுக்கு வருடாந்தம் இவ்உதவி ஒன்றே அரசினால் வழங்கப்பட்டு வருகின்ற போதும் அது தற்போது நிறுத்தப்பட்டுள்ளமையால அப்பகுதி விவசாய மேம்பாட்டு நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே இப்பகுதி விவசாயிகளுக்கு மண் வெட்டிகளை வழங்க உடனடி நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (33)

# ஆரம்பக்கல்வித்துறை வளர்ச்சியில் வடக்கு-கிழக்கு குறித்து அரசு பாராமுகம்

*யாழ். கல்வியியலாளர் கவலை*

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசாங்கம் வடக்கு கிழக்கு மாகாணத்தின் ஆரம்பக் கல்வித்துறை சார் வளர்ச்சிகள் மீது அக்கறை காட்டாமை காரணமாகப் பிரதேச வாழ், சிறார்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக யாழ். குடாநாட்டு கல்வியியலாளர்களினால் சுட்டிக் காட்டப் படுகிறது.

அரசாங்கம் தமிழ் மக்கள் பெரும் பான்மையாக வாழும் வடக்கு கிழக்கின் ஆரம்பக்கல்வித துறையை புறக்கணிப்பதன் மூலம் தமிழ் சிறார்களின் கல்வி எதிர்காலம் பெரும் பாதிப்படையக் கூடிய அபாயம் காணப்படுவதுடன் இதன் விளைவும் பாரியதாக இருக்கும் எனவும் கல்வியியலாளர்களால் மேலும் சுட்டிக்காட்டப்படுகிறது

குறிப்பாக வடக்கு, கிழக்கு பகுதிகளில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளில் 30 வீதமான பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை காணப்படுவதுடன் ஆரம்பப்பாடசாலை மாணவர்களின் இணைபாடவிதானச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு உரிய வசதிகளை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை எனவும் அதிருப்தி தெரிவிக்கப்படுகின்றது (33)

# பொலிசார் ரோந்துவரும் வேளையிலும் ஈருருளி களவு தொடர்கிறது

-சுன்னாகம் வாசிகள் தெரிவிப்பு

(நல்லூர்)

சுன்னாகம் நகரப் பகுதியில் நிறுத்திவைக்கப்படும் ஈருருளிகள் தொடர்ந்து களவு போவதால் பொது மக்கள் ஈருருளிகளை நகரப்பகுதிகளில் நிறுத்தி வைப்பதற்கு பயப்படுகின்றார்கள் என சுன்னாகம் வாசிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த வகையில் கடந்த நான்கு நாட்களுக்கு முன்னர் மூடையுடன் ஈருருளியை நிறுத்தி விட்டு கடையினுள் சென்று திரும்புவதற்கு இடையில் மூடையை இறக்கி வைத்துவிட்டு ஈருருளி திருடப்பட்டுள்ளது.

இதேபோன்று நேற்று முன்தினம் பெண்களுக்கான ஈருருளியும் திருடப்பட்டுள்ளது. இதே நேரம் சுன்னாகம் பிரதான கடைகள் இருக்கும் பகுதிகளில் நாளாந்தம் பல தடவைகள் சிறிலங்கா பொலிசாரின் ரோந்து நடவடிக்கைகளும் இடம் பெற்று வரும் வேளையிலும் இத்தகைய களவுகள் இடம் பெற்று வருகின்றதாகவும் அவர் தெரிவிக்கின்றார். (41)

# கெருடாவில் திருக்குமரன் ச.ச நிலையப்பகுதியில் அஞ்சல் பெட்டிவைக்க மக்கள் கோரிக்கை

(தென்மராட்சி)

சாவகச்சேரி கெருடாவில் திருக்குமரன் சனசமூக நிலையப் பகுதியில் வசிக்கும் மக்கள் தம்முடைய பகுதிக் கடிதங்களைப் போடு வதற்கு,கடிதப் பெட்டி ஒன்றை வைக்கும் படி கோரிக்கை விடுத் துள்ளனர்.

இது குறித்து இப்பகுதி மக்கள் சாவகச்சேரி அஞ்சல் அலுவலக அதிகாரியிடம் விண்ணப்பம் செய்துள்ளதாகவும் இதை அவர் யாழ். பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் கவனத்திற்கும் கொண்டு சென்றுள்ளதாகவும் ஆனால் அத்தியட்சகரோ பாராமுகமாய் செயற்படுவதாகவும் இப் பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (28)

# சிற்றூர்தி தரிப்பிட நிலையம் சுன்னாகத்தில் திறந்துவைப்பு

(நல்லூர்)

சுன்னாகம் தனியார் சிற்றூர்தி தரிப்பிட நிலையம் நேற்று முன்தினம் காலை யாழ். மாவட்ட அரசாங்க அதிபரும், யாழ். மாவட்ட தேசிய போக்கு வரத்து ஆணைக்குழுத் தலைவருமான கணேஸ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

வலி தெற்கு பிரதேசசபைச் செயலாளர் திருமதி சு.சொக்கலிங்கம் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் பொதுச் சுடரினை யாழ். மாவட்ட தனியார் சிற்றூர்தி சேவைச் சங்கப் பொறுப்பாளர் சு.பாலையா இலங்கை தனியார் பேருந்து சங்கத் தலைவர் கெமுனு விஜயரத்ன யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

சிற்றூர்தி தரிப்பிட பெயர்ப்பலகையை யாழ். மாவட்ட துணைஅரசியல்துறைப் பொறுப்பாளர் க.கண்ணன் திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து கூட்டமும் இடம்பெற்றது. (41)

# மாணவருக்கு வாசிப்புப்பழக்கத்தை மேம்படுத்தும் நூல்கள் அன்பளிப்பு

*ஆசிய அபிவிருத்தி வங்கி நடவடிக்கை*

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்துவதற்கான உதவிகளை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளது.

அந்த வகையில் தென்மராட்சி கல்விவலயத்திலுள்ள 27 பாடசாலைகளுக்கும் வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள 37 பாடசாலைகளுக்கும் யாழ்ப்பாண கல்விவலயத்திலுள்ள 10 பாடசாலைகளுக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வாசிப்பிற்கான நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துவதன் மூலம் அவர்களை பல்துறை அறிவுசார்ந்தவர்களாக சமுதாயத்தில் உருவாக்கும் நோக்கிலேயே ஆசியஅபிவிருத்தி வங்கி இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளது. (33)

## மகளிர் அரசியல்துறையின் தென்மராட்சிக்கோட்ட செயலணி அலுவலகம் திறப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சிக் கோட்ட மகளிர் அரசியல்துறை செயலணி அலுவலகம் புதிதாகத் திறந்து வைக்கப்படவுள்ளது. நாளை செவ்வாய்க் கிழமை காலை 10 மணியளவில் கந்தையா வீதி-சாவகச்சேரியில் இப் புதிய அலுவலகம் திறந்து வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (28)

# பழிவாங்கல் இடமாற்றத்தினால் வவுனியா தெற்கு வலயக்கல்வி ப்பணிப்பாளருக்கு எதிராக வவுனியா மேன் முறையீட்டு நீதிமன்றில் வழக்குத்தாக்கல்

வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளரினால் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றமானது பழிவாங்கல் இடமாற்றம் எனக்கூறி அதற்கு நியாயம் கோரி ஆசிரியர்கள் வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளருக்கு எதிராக வவுனியா மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் கடமையாற்றும் 60 ஆசிரியர்களுக்கு கடந்த முதலாம் திகதி முதல் இடமாற்றம் வழங்கப்பட்டது இடமாற்றம் கோரியவர்களுக்கும் கோராதவர்களுக்குமாக வழங்கப்பட்ட இவ்இடமாற்றமானது வவுனியா கல்விச்சமூகம் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது.

இலங்கையில் ஏற்பட்ட ஆழிப் பேரலை அனர்த்தம் காரண மாக சகல இடமாற்றங்களும் இரத்துச் செய்யப்படுவதாகவும், இடமாற்றங்களை மேற்கொள்ள வேண்டாம் எனவும் பொதுநிர்வாக அமைச்சு சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ள நிலையிலேயே வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் இவ்விட மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்விடமாற்றத்தினால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தமக்கு நியாயம் பெற்றுத்தருமாறும் தமது இடமாற்றங்களை இரத்துச் செய்யுமாறும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வவுனியா கிளையினரைக் கோரிய போதும் அவர்கள் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும இதனால் தாம் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைமையிடம இக்கோரிக்கையை விடுத்ததாகவும் பாதிக்கப்பட்ட சில ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர் இவ் ஆசிரியர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட இலங்கை ஆசிரியர் சங்கத் தலைமை வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் பொது நிர்வாக அமைச்சின் இடமாற்ற இரத்து சுற்றறிக்கையை மீறி யுள்ளதாகவும் வழங்கப்பட்ட இடமாற்றமானது பழிவாங்கல் இடமாற்றம் எனவும் கூறி வவுனியா மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது இவ் வழக்கு விசாரணை இம் மாதம் 24 ஆம் திகதி மேற்கொள்ளப்படவுள்ளது (10)

# 100இற்கு மேற்பட்ட கி. சேவையாளர் மீது அரசு ஒழுக்காற்று நடவடிக்கை

(கொழும்பு)

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மோசடி மற்றும் நிவாரணப் பணிகளில் திருப்தியின்மை ஆகிய காரணங்களுக்காக நாட்டின் பல பாகங்களிலும் 100 இற்கும் மேற்பட்ட கிராம சேவை உத்தியோகத்தர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக சமூக சேவைகள் பிரதியமைச்சர் எஸ்.டி. சந்திரசேன தகவல் வெளியிட்டுள்ளார்.

இதனைத் தவிர நிவாரணப் பணிகளில் திறமையற்றவர்கள் என பிரதேச செயலாளர்கள் 12 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் சிலர் வேறு பதவிகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். மற்றும் சில பிரிவுகளில் மேலதிக பிரதேச செயலாளர்கள் கடமைக்கு இணைககப்பட்டுள்ளனர். ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ள கிராம சேவையாளர்கள் சிலர் மோசடிகளுடன் தொடர்புடையமை கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்கள் என்ற தகவல்களையும் அவர் வெளியிட்டுள்ளார்.

## 41 ஆவது நினைவு நாள் கடைப்பிடிப்பு

(வவுனியா)

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக மரணித்தவர்களுடைய 41ஆவது நினைவு நாள் நேற்று வவுனியாவிலும் செட்டிகுளத்திலும கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

நேரியகுளம் இந்து இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் காலை 10 மணிக்கு ஆழிப்பேரலை அனர்த் தம் காரணமாக இறந்த அனைத்து ஆத்மாக்களுக்குமான விசேட பிரார்த்தனை சித்தி விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்றுள்ளது.

## கடந்த வாரத்தில்

**27.01.2005-02.02.2005**

**27.**

➡ அமெரிக்காவின் புதிய வெளியுறவு அமைச்சராக கொண்ட லிசாரைஸ் பதவியேற்பு


பதவியேற்பில்...

**28.**

➡ அந்தமான், நிக்கோபார் தீவு களில் நில நடுக்கம்.

➡ பகிஸ்தானின் கிழக்கு பஞ்சாப் மாகாணத்தில் எரிவாயு விநியோகம் செய்யும் குழாயை தீவிரவாதிகள் வெடிவைத்துத் தகர்த்தனர்.

➡ பங்களாதேஷத்தில் எதிர்க் கட்சியான அவாமிலீக் கட்சி நடத்திய பேரணியில் குண்டு வெடித்ததில் அக்கட்சியின் முன்னணித் தலைவர் உட்பட 5பேர் பலி 70 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்த சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து 3நாள் கடையடைப்பு இடம் பெற்றது.

➡ ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தின் தென்பகுதியில் இடம் பெற்ற கார்க் குண்டுத் தாக்குதலில் 6 பேர் பலி.


தலைநகரில் பாதுகாப்பு

**29.**

➡ சீனாவுக்கும் தாய்வானுக் குமிடையே 55 ஆண்டுகளுக்குப் பின் விமானசேவை ஆரம்பம்.


ஆரம்பவிழாவில்

➡ பீகாரில் தேர்தல் பிரசாரம் செய்வதற்காக வெங்கையாநாயுடு சென்ற உலங்குவானூர்தியை நக்சலைட்டுக்கள் குண்டு வைத்துத் தகர்த்தனர்.

➡ செசன்யாவில் இராணுவ வாகனம் கண்ணிவெடியில் சிக்கியதில் 9 ரஷ்யவீரர்கள் பலி.

➡ ஈராக்கிய தலைநகரான பாக்தாத்துக்கு தென்பகுதியில் அமெரிக்க இராணுவ விமானம்விழுந்து நொருங்கியதில் 2 இராணுவ வீரர்கள் பலி.

➡ பாக்தாத்தில் வாக்களிப்பு நிலையத்திற் கருகில் தற்கொலை குண்டு தாரிகள் நடத்திய குண்டுத் தாக்குதலில் ஒருவர் பலி ; 4 பேர் காயம்.


வாக்களிப்பு நிலைய பாதுகாப்பு

**30.**

➡ ஈராக்கில் பொதுத்தேர்தல் நடைபெற்றது.


தேர்தல் கடமையில்

➡ பாகிஸ்தான் தலைநகர் கராச்சியில் இருந்து 350 கிலோ மீற்றர் தூரத்தில் பேருந்து ஒன்று வான் ஒன்றுடன் மோதியதில் 23 பேர் பலி ; 9பேர் காயம்.

➡ நேபாளத்தில் மாவோயிஸ்ட்தீவிரவாதிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் 40 தீவிரவாதிகள் சுட்டுக் கொலை நேபாளத்தின் காஞ்சன் பூர் மாவட்டத்தில் உள்ள பொலிஸ்மா அதிபரின் வீட்டை மாவோ தீவிரவாதிகள் முற்றுகையிட்டதையடுத்தே இச் சம்பவம் இடம் பெற்றது.

➡ காஸா பள்ளத்தாக்கிலுள்ள யூத குடியேற்றங்களை விட்டு வெளியேற இஸ்ரேலிய பிரதமர் ஏரியல்ஷரோன் மேற்கொண்ட தீர்மானத்தை எதிர்த்து ஒரு இலட்சத்து 30 ஆயிரம் மக்கள் இஸ்ரேலிய நீதிமன்றத்தின் முன்பு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

**31.**

➡ பாக்தாத்தின் வடமேற்குப் புறத்தில் சி-130 கேக்குலிஸ் ரக விமானம் தீவிரவாதிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது. இதில் பயணம் செய்த அமெரிக்க பிரிட்டிஷ் படையினர் பலர் பலி.

➡ இந்திய இராணுவத்தின் புதிய தலைமைத் தளபதியாக ஜே.ஜே.சிங் பதவியேற்றார்.



➡ குவைத்தில் பாதுகாப்பு படையினருக்கும் முஸ்லிம் அடிப்படை ஆயுததாரிகளுக்குமிடையே அல்குவரைன் பகுதியில் இடம் பெற்ற மோதலில் பலர் பலி.

**01..**

➡ தஜிகிஸ்தான் தலைநகர் துஷான்பேயில் அரச கட்டடமொன்றின் அருகே இடம் பெற்றகார்க் குண்டுத் தாக்குதலில் ஒருவர் பலி.

➡ வியட்னாமில் பறவைக் காய்ச்சல் நோய்க்கு லாங் அன் மாநிலத்தைச் சேர்ந்த 10 வயது சிறுமி பலி.

➡ ஜம்முகாஷ்மீரில் நகராட்சித்தேர்தல் விறுவிறுப்புடன் இடம் பெற்றது.

➡ நேபாளத்தில் சேர்பகதூர் ரேபா தலைமையிலான கூட்டணி அரசை அந்நாட்டு மன்னர் ஞானேந்திரா திடீரென பதவி விலக்கியுள்ளார்.

➡ ஈராக் தேர்தலுக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்து போராளிகள் நடத்திய தாக்குதலில் 35 பேர் பலி.

➡ ஈராக்கின் மேற்கு பாக்தாத்தின் அன்பார் மாகாணத்தில் அமெரிக்க கரையோர காவற் படையைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டனர்.

➡ ஜப்பானிய தீவான மியாகிஷிமாவில் 2000 ஆம் ஆண்டு எரிமலை குமுறி வெடித்த போது அப் பகுதியிலிருந்து வெளி யேற்றப்பட்ட 60 பேர் மீண்டும் தமது வீடுகளுக்குத் திரும்பினர்.

➡ ஈராக்கின் தெற்குப் பகுதியில் உள்ள சிறைச்சாலையில் திடீர் கலவரம் ஏற்பட்டதில் இராணுவத்தினரின் தாக்குதலில் 4 கைதிகள் பலி; மேலும் இராணுவத்தினர் உட்பட 6 பேர் காயமடைந்தனர்.

➡ வடகிழக்கு தாய்வானில் இரு முறை நிலநடுக்கம் ஏற்பட்டது.

➡ பாகிஸ்தானின் பலுச்சிஸ் தான் மாகாணத்தின் தலைநகர் குவெட்டாவில் இடம் பெற்ற தொடர் குண்டு வெடிப்பில் 6பேர் பலி.

**02.**

➡ ஈராக்கின் வடக்கில் எண்ணெய் வளம் மிக்க நகரான கிர்குக்கில் ஆயுததாரிகள் சிலர் நடத்திய அதிரடித் தாக்குதலில் 12 ஈராக்கியர்கள் பலி.

➡ நேபாளத்தில் 10 பேர் அங்கம் வகிக்கும் புதிய அமைச்சரவை மன்னர் ஞானேந்திராவால் நியமிக்கப்பட்டது.


மன்னர் ஆலோசனை

# முல்லை தேசிய எழுச்சிப் பேரவையின் நடப்பாண்டு வேலைத்திட்டங்கள் ஆராய்வு

(புதுக்குடியிருப்பு)

முல்லை மாவட்ட அரசியல் துறை செயலகத்தில் தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் கந்த சுவாமி தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு புதுக்குடியிருப்பு கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர்கள், கிராம அலுவலர்கள் மற்றும் நிறுவன பிரதிநிதிகளுக்கான ஒன்று கூடல் இடம் பெற்றது.

இங்குதேசியஎழுச்சிப் பேரவையினர் விழிப்பாகவும் அர்ப்பணிப்புடனும் செயற்பட வேண்டிய அவசியம் வலியுறுத்தப்பட்டதுடன் 2005 ஆம் ஆண்டிற்கான வேலைத் திட்ட விடயங்களும் ஆராயப் பட்டது.

ஒன்றுகூடலில்முல்லை மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப் பாளர் சின்னண்ணர் புதுக்குடியிருப்பு முள்ளியவளை கோட்ட அரசியல்துறை பொறுப்பாளர் பிறையாளன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (08,19)

# வைத்தியர்களுக்கான தங்கும் விடுதி கட்டட வேலைகள் இழுத்தடிப்பு

## அவலத்தைப் போக்க நடவடிக்கை வேண்டும்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு அரசினர் வைத்தியசாலையில் கடந்த பல மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட வைத்தியர் விடுதியின் வேலைகள் அரைகுறையில் உள்ளதை அவதானிக்க முடிகிறது. இவ்விடுதியின் வேலையை குறித்த காலத்துக்குள் செய்து கொடுக்காமையால் வைத்தியர்கள் தங்குவதற்குரிய இடம் இல்லாமையால் பெரும் அவலங்களை எதிர் நோக்கி வருகின்றனர் (08)

# நோர்வே அகதிகளுக்கானநிலையப் பிரதிநிதி மட்டக்களப்பு,திருகோணமலை விஜயம்

நோர்வே நாட்டின் அகதிகளுக்கான நிலையப் பிரதிநிதி பென்டா நேற்று முன்தினம் திருகோணமலைக்கு விஜயம் செய்தார்.

அவர் அங்கு செல்வநாயகபுரம் பாடசாலை, நிலாவெளி பாடசாலை, மற்றும் ஸ்ரீமாதுமையம்பாள் பாடசாலை என்பவற்றிற்கு சென்று நிலைமைகளை அவதானித்தார் அத்துடன் இடம் பெயர்ந்தோரை சந்தித்தார்.

சுனாமியின் பின்னர் சேதம் ஏற்பட்டுள்ள பாடசாலைகளை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவது குறித்து அறிக்கை ஒன்றை தயாரிப்பதே இவரின் பயண நோக்கமாகும்.

இதேவேளை கடந்த வெள்ளிக் கிழமை இவர் மட்டக்களப்பிற்கு விஜயம் ஒன்றை மேற் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (32)

# மின்சார விநியோகம் ஒரு மணிநேரம் நீடிப்பு!

(அலுவலக செய்தியாளர்)

மின்சார சபையினரால் கிளிநொச்சி பிரதேசத்தில் நடை முறைப் படுத்தப் பெற்று வரும் மின் விநியோகம் ஒரு மணித்தியாலத்தால் நீடிக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களது கல்வி அபிவிருத்தி குறித்து பெற்றோர்களின் வேண்டுகைக்கமைவாக இன்று முதல் காலை 5.00 மணிமுதல் மின் வழங்கல் சேவை வழங்கப்படவுள்ளதாக மின்சாரசபையினர் தெரிவித்துள்ளனர்.

இதுவரைகாலமும் காலை 6.00 மணிமுதல் வழமையாக மின்சேவை இடம் பெற்றுவந்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# மாணவரைக் காணவில்லை

(மட்டக்களப்பு)

வேளாண்மை அறுவடைக்கு கூலித்தொழிலாளர்களை அழைத்து வர வெலிக்கந்தைக்குச் சென்ற கிழக்கு பல்கலைக்கழக பட்டதாரி மாணவரொருவர் காணாமல் போயுள்ளார்.

ஏறாவூர் 5ஆம் பிரிவைச் சேர்ந்த 26 வயதுடைய நல்லதம்பி சிறிகாந்த என்பவரே இவ்வாறு காணாமல் போயுள்ளவர் ராவார். கிழக்குப்பல்கலைக்கழகத்தின் பட்டதாரி மாணவரான இவர், வெலிக்கந்தை பிரதேசத்தில் நடமாடும் கருணா குழுவினராலேயே கடத்தப்பட்டிருக்கலாமென பல்கலைக் கழக மாணவர்கள் மத்தியில் சந்தேகம் நிலவுகின்றது.

# சின்னக்கடை மாதாகோவில் வருடாந்தப் பெருவிழா


(மன்னார்)

மன்னார் சின்னக்கடை மாதா கோவில் வருடாந்தப் பெருவிழா கடந்த 02.02.2005 மன்னாரில் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

பங்குத்தந்தை அருட்திரு எமிலியானுஸ்பிள்ளை தலைமையில் இடம் பெற்ற இந்தப் பெருவிழாவில் காலை 7.30 மணியளவில் திருப்பலி இடம் பெற்றது. மறையுரையை தமிழ் நாட்டிலிருந்து வருகைதந்த அருட்தந்தை சிற்றரசன் நிகழ்த்தினார். மாலை 4.00மணிக்கு மாதாவின் சொரூபம் மன்னார் நகரை வலம் வந்து பின்னர் பங்கு தந்தை ஆசியுடன்விழா முடிவு பெற்றது. (18)

# அண்டைக்கு நடந்த கோரமான சம்பவங்கள் இன்னும் என் நெஞ்சை விட்டு மறையவில்லை

*கடற் புவி நடுக்கத்தால் எழுந்த பேரலைகள் முல்லைத்தீவை கொடுமையாகத் தாக்கிய சமயம் முல்லையில் அமைந்திருந்த செந்தளிர் சிறுவர் இல்லத்தில் இருந்து உயிர்தப்பியவர்கள் சிலர். அவர்களில் கோரமான காட்சிகளை நேரில் பார்த்து திகைப்படைந்து போயிருக்கும் செந்தளிர் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த நிரஞ்சனா (வயது - 13) என்ற சிறுமி தனது துயர அனுபவத்தைப் பகிர்ந்து கொள்கிறார்.*





ஆரதி

**ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்**

பகுதி -17

அ.லோகீசன்

**நான்** காலமை எழும்பி குளிச்சிட்டு வந்து சாப்பிட்டுட்டு அங்க இருந்த சின்னாக்களுக்கும் சாப்பாட்டை தீத்திப் போட்டு எங்கட அறைக்குள்ள இருந்து வெளியால வந்தன். அப்ப ஒரு சத்தம் கேட்டிச்சு நான் அம்மாட்ட என்னம்மா இப்படிச் சத்தம் கேக்குது எண்டு சொன்னன் "அது ஏதோ பெரிய வாகனம் றோட்டால போகுது போல கிடக்கு பிள்ளை" என்றார் அவர்.

சில நிமிடங்களில் அம்மா ஆத்துப் பக்கம் பாத்திட்டு "பிள்ளையள் கடல் பெரிசாய் கொந்தளிச்சுக் கொண்டு வருகுது என்ன செய்யிறது எண்டு தெரியாது" எண்டு பெரிசா கத்தினபடி சின்னப்பிள்ளையள் இருந்த அறைக்குள் ஓடிவந்தார். அந்த சத்தத்தை கேட்டிட்டு நான் கடல் பக்கம் பார்த்தன் ஆத்துக்குள்ளால கடல் மலை மாதிரி கறுப்பு நிறமாய் பொங்கி எழும்பி வந்து கொண்டிருந்திச்சுது. அதைப்பாத்த உடனேயே நாங்கள் எல்லாரும் சாகப்போறம் என்ன செய்யிறது எண்டு நினைச்சுக் கொண்டு வீட்டுக்கு வெளியால நிண்ட ஆரதி எண்டுற சின்னப் பிள்ளையையும் தூக்கிக் கொண்டு பெரிய வீட்டுக்குள்ள ஓடிப் போனன.

நான் வீட்டு வாசலுக்குப்போக கடல் எங்கட வீட்டுக்குள்ள வந்திட்டுது. ஆரதி கடலைப் பார்த்து பயந்து திகைச்சுப் போய் இருந்தாள். அவளைப் பாக்கிறதா? கடலைப்பாக்கிறதா? என்ன செய்யிறது நான் கடலைப் பார்த்தேன். அது எங்கட முத்தத்தால ஓடி திடீர் எண்டு கூடிட்டுது. எனக்கு பயமாய் இருந்திச்சு நாங்கள் எல்லாரும் சாகப்போறம் எண்டு நினைசசு கத்திக் கொண்டு வீட்டுக்குள்ள ஓடிப்போனேன்.

வீட்டுக்குள்ள எல்லா இடமுமே தண்ணி வந்திட்டுது. கதவாலதான் கடல் வீட்டுக்குள்ள வந்தது. அப்ப கதவசாத்துவம் எண்டுட்டு கதவடிக்கு போக மாலதி அம்மா வீட்டுக்குள்ள வந்திட்டா. அவா வந்த உடன எனக்கு ஒரு துணிவு வந்தது. உடன நாங்கள் எல்லாரும சேர்ந்து கதவத் தள்ளிப்பிடிச்சம் ஆனால் கதவையும் தள்ளிக் கொண்டு கடல் வந்திச்சுது. ஒரு மாதிரி கதவத்தள்ளி பூட்டி போட்டம். அப்படி இருக்க ஒரு பிள்ளை கதவுக்கு வெளியால வந்தி நிண்டு " என்னை தண்ணி இழுக்குது கதவைத் திறவுங்கோ" எண்டு கத்த நாங்கள் கதவை திறந்தம். கதவு திறந்தது தான் கடல் தண்ணி பயங்கர வேகத்தில உள்ளுக்கு வந்திட்டுது.

இதுக்கிடையில நான் கதவைதள்ளிப் பிடிக்கேக்க ஆரதியை இறக்கிப் போட்டுத் தான் கதவத் தள்ளினம் அப்ப அவள் அழுது கொண்டிருந்தாள் உள்ளுக்கு வந்த மாலதி அம்மா ஆரதியை தூக்கிக் கொண்டு அவா பார மரிக்கிற பிள்ளையள் இருந்த அறைப் பக்கம் "பிள்ளையளே தண்ணி வந்திட்டுது நாங்கள் என்ன செய்யப் பேறமோ தெரியாது எங்களை ஆர்காப்பாற்றப் போயினம்" எண்டு தன்கணக் கில் புலம்பிக் கொண்டு போனார்.

அம்மா போனது தான் பிள்ளையள் எல்லாம் அம்மாவ சுத்திப்பிடிச்சு குழறி அழுது கொண்டிருந்ததுகள். இப்படியே இருக்க அலை பெரிதாய் வந்துட்டுது இப்ப தண்ணியும் உள்ளுக்க வர சின்னப்பிள்ளை யள் எல்லாரையும் சேத்து ஒரு அறைக்குள்ள தள்ளிக் கொண்டு போய் விட்டுட்டுது. அந்த அறைக்க போனால் அம்மா தன்ரரண்டு கையிலையும் பிள்ளைகளைத் தூக்கி வைச்சுக்கொண்டு மற்றப்பிள்ளையளை பாத்து கதறி அழுது கொண்டிருந்தார். மற்றப்பிள்ளையள் எல் லாம் தண்ணிக்குள்ள தாண்டு தாண்டு மூழ்கிப் போனார்கள். என்னையும் தண்ணி தாட்டுவிட்டது. எனக்கும் ஒண்டும் தெரியேல்ல என்ன செய்யிறது. எல்லாருமா சேர்ந்து தத்தளிச்சுக் கொண்டிருக்க நான் ஒரு கயித் தப்பிடிச்சு இழுத்து மேல் சுவரில ஏறிட்டன். நான் மேல ஏற தண்ணியும் வந்திட்டுது. என்ர கண்ணுக்கு முன்னாலையே சின்னனுகள் எல்லாம் தண்ணி குடிச்சுத் தாண்டு கொண்டிருந்தார்கள். அவர் களைப் பார்க்க பாவமாய் இருந்தது. என்ன செய்யிறது. என்னால பாக்கவே ஏலாமல் இருந் திச்சு. அப்படி பயங்கரமா இருந்தது. எனக்கு மயக்கம் வாற மாதிரி கிடந்தது.

இப்படியே தண்ணியும் குறைய நான் கீழ பாத்தன் அலுமாரியள், கட்டில்கள், மேசையள், எல் லாம் கீழ விழுந்து போய் கிடந்திச்சு அதுக்குள்ள எங்கட சின்னப்பிள்ளையளின்ர பொடியள் எல்லாம் கிடந்தது..

கடல் வரேக்க நான் தூக்கிக் கொண்டு ஓடி வந்த ஆரதியை பாத்தன் அவள் நிலத்தில தண்ணி குடிச்சு செத்துப் போய் கிடந்தாள்

பாவம் அவளுக்கு மேல அலுமாரி ஒண்டு விழுந்து அவளின்ர ஒருகையை துண்டாக்கிப்போட்டுது.

தண்ணிக்குள்ள தாண்டு மூச்சுப் போகாமல் தண்ணிகுடிச்சு ஆரதி செத்துப்போனாள் ஆட்டம் அசைவில்லாமல் கிடக்கிறாள இப்படியே இருக்க கடல்புலி மாமாக்கள் வந்து எங்களை காப்பாற்றிச்சினம் நாங்கள் போகேக்க ஆரதின்ர பொடிய தூக்கிக் கொண்டு முள்ளியவளைக்குப் போன நாங்கள். ஆரதிய மாதிரித்தான் அங்க இருந்த கொஞ்சப் பேரை தவிர மிச்சம் எல்லாரும் செத்துப் போச்சினம். நான் எப்படி தப்பினன் எண்டுறது எனக்கே தெரியேல்ல. அண்டைக்கு நடந்த பயங்கர சம்பவத்துக்குப் பிறகு எங்களோட இருந்த கனபேரைக் காணேல்ல. அவையள் செத்துப் போச்சினம்போல கிடக்கு. இப்ப கொஞ்சப் பேர்தான் இங்க(கைவேலி) வந்திருக்கிறம். என்னோட சேர்ந்து விளையாடுகிற பிள்ளையள் ஒண்டையும் காணேல்ல. அவையள் எல் லாரும் செத்துப்போனால் இனி திரும்பி வரவேமாட்டினம். அவையள் எல்லாரை யும் நாங்கள் இனிப் பாக்கவே எலாது.

அண்டைக்கு நடந்த அந்த சம்ப வத்தை என்னால மறக்கவே ஏலாமல் இருக்குது. கடல் வந்ததும் சின்னப்பிள்ளையள் எல்லாரும் கத்தினதும் தண்ணீக்க தத்தளிச்சதும். பிறகு தண்ணி வத்தினவுடன அவயள் எல்லாம் செத்துக் கிடந்ததையும் மறக்கவே ஏலாமல் இருக்கு. எந்த நேரமும் அந்தக் காட்சியள் தான் என்ர கண்ணுக்கு வந்து நிக்குது.

அதுவும் ஆரதியை நான் தூக்கிக் கொண்டு வந்ததும் பிறகு அம்மாவேண்டி வைச்சிருந்தும அவான்ர கையில இருந்து அவள் தவறிவிழுந்ததும் பிறகு செத்துப்போய் கிடந்ததும் எல்லாம் எனக்கு மறக்கவே ஏலாமல் இருக்கு. என்ன செய்யிறது. இந்தக்கடல் ஏன் இப்படி செய்தது. சும்மாதானே இருந்தது. திடீர் எண்டு இப்பிடி வந்து எல்லாரையும் ஏன் அடிச்சது? என்று விறைத்த முகத்துடன் எம்மிடம் கேட்டார் அந்த செந்தளிர்ப் பிள்ளை.

அடுத்ததாக செந்தளிர் இல்லத்துக்கு ஏற்பட்ட ஒட்டுமொத்தமான இழப்புக்கள் என்ன? எத்தனை பிள்ளைகள் இருந்தார்கள்? எத்தனை பேர். தப்பினார்கள்.? இறந்தவர்கள் எத்தனை பேர் மீதிப்பிள்ளைகள் எங்கே? என்ற முழுமையான தகவல்களை சம்பவத்தில் சிக்கி உயிர் தப்பிய நிர்வாகப் பணிப்பாளர் கூறியவற்றை உங்களுக்குத் தருகிறோம்.

தொடரும்



# சனாதிபதி தேர்தலில் சந்திரிகா போட்டியிட்டால் ரணில் இலகுவாக வெற்றி பெற முடியும்

*பெரட்றிக் நியூமன் அமைப்பு ரணிலுக்கு தெரிவிப்பு*

அடுத்து வரும் சனாதிபதி தேர்தலில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க போட்டியிடுவதற்கான வாய்ப்பினைஏற்படுத்துமாறு எதிர்க்கட்சி தலைவருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள அரசியலமைப்பு சட்டமானது இரு தடவைகளுக்கு மேல் ஒருவர் நாட்டின் சனாதிபதியாக பதவி வகிக்க முடியாது எனத் தெரிவிக்கின்றது.

இந்த அரசியலமைப்பில் திருத்தம் மேற்கொள்வதன் மூலம் மீண்டும்சனாதிபதி தேர்தலில் சந்திரிகா குமாரதுங்க போட்டியிடுவதற்கான வாயப்பினை ஏற்படுத்திக் கொடுக்குமாறு பெரட்றிக் நியூமன் என்ற அமைப்பு ரணில் விக்கிரமசிங்கவிற்கு அறிவுரை வழங்கி யுள்ளது.

சனாதிபதியின் செல்வாக்கு தற்போது சரிவடைந்து வருவதாகவும் சனாதிபதி தேர்தலில் மீண்டும் சந்திரிகா போட்டியிடும் பட்சத்தில் அவரை இலகுவாக வெற்றிகொள்ள முடியும் என்றும்சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அவ்வாறான சந்தர்ப்பம் ஏற்படாத பட்சத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் சார்பிலோ அன்றி சுதந்திர கட்சி சார்பாகவோ பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சனாதிபதி வேட்பாளராகநியமிக்கப்படுவார் என்றும் அவரை வெற்றி கொள்வது இயலாதவிடயம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இந்த அமைப்பினால் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு மக்கள் மத்தியில்மிகப் பெரும் செல்வாக்கு இருப்பதாக தெரியவந்துள்ளது.இவ்வாறான நிலையில் அவரை எதிர்த்து ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டால் தோல்வி அடைய வேண்டிய நிலை ஏற்படும் என்றும்குறிப்பிடப் பட்டுள்ளது.

# சனாதிபதி சந்திரிகா இன்று பாகிஸ்தானுக்குப் பயணம்

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இன்று பாகிஸ தான் செல்ல உள்ளார். இதேவேளை சனாதிபதியின் இந்த விஜயம் குறித்து பாகிஸ்தான் ரைம்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில், சிறிலங்கா சனாதிபதி பாகிஸ்தானுக்கும், சிறிலங்காவிற்கும் இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடுவார் எனத் தெரிவித்துள்ளது. இவ்விஜயத்தின் போது பாகிஸ்தான் சனாதிபதி மற்றும் பிரதமருடனும் சந்திரிகா குமாரதுங்க பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிவாரணப் பணிகளில் புலிகளை இணைப்பதற்கு ஹெல உறுமய எதிர்ப்பு

(கொழும்பு)

அரசாங்கம் மேற்கொள்ளும் நிவாரணப் பணிகளில் விடுதலைப் புலிகளை இணைக்கக் கூடாது என ஜாதிகஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்ட அவர் நோர்வே அரசாங்கம் விடுதலைப்புலிகளையும் இணைத்து அரசாங்கம் வடக்கு கிழக்கில் நிவார்ணப் பணிகளை முன்னெடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளது. அரசாங்கம் மேற்கொள்ளும் நிவாரணப் பணிகளில் விடுதலைப்புலிகளை இணைத்துக் கொள்ளும் பட்சத்தில் அது விடுதலைப்புலிகளுக்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்து விடும் எனவே இதற்கு வழியேற்படுத்தி விடக்கூடாது எனத் தெரிவித்தார். (32)

## 45ஆம் நாள் நினைவு அஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 16 - 12 - 1950 | 26 - 12 - 2004 |



## இளையகுட்டி-மாணிக்கம்

நி.முகவரி:- முகமாலை அம்பளவளை - பளை.

த.முகவரி:- உழவனூர் தம்பிராசபுரம் தருமபுரம்.

இவரது 45ஆம் நாள் நினைவுகள் 08.02. 2005 நாளை இவரது தற்காலிக இல்லத்தில் இடம்பெறவுள்ளது எனவே உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மா.மகேஸ்வரன்
(மகன்)

(5645)

## 02 ஆம் ஆண்டு நினைவு நாள்

ஜனனம் 23 - 03 - 1978

வீரச்சாவு 07 - 02 - 2003



கடற்கரும்புலி

### லெப்.கேணல் ஆற்றலோன் / சூதன்

### கிருஸ்ணசாமி சதீஸ்வரன்

மீசாலை கிழக்கு மீசாலை யாழ்.

நெடுந்தீவுக் கடலில் சிறிலங்கா கடற்படையின் சுற்றிவளைப்பின் போது படகிற்கு தீமூட்டிவீரகாவியமாகினார். இவருடன் வீரச்சா வடைந்த கடற்கரும்புலி மேஜர்அன்பன், மேஜர் பொதிகைத்தேவன் ஆகியோரையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

தகவல்:-
குடும்பத்தினர்
மீசாலை கிழக்கு மீசாலை.

(சி-5649)

## புகையிரத கட்டணங்களை உயர்த்தத் தீர்மானம்

(கொழும்பு)

சிறிலங்காவில் புகையிரத கட்டணங்களை உயர்த்த சிறிலங்கா அரசங்கம் தீர்மானித்துள்ளது. அடுத்த இரண்டு மாதங்களுக்குள் கட்டண அதிகரிப்பு அமுலுக்கு வரும் என்று போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

கட்டண உயர்வை அமுலுக்கு கொண்டுவராது விட்டால் புகையிரத சேவையை நடத்த முடியாச நிலை ஏற்படும் என்று அவர் கூறினார். தற்போது பயணிகளிடமிருந்து 1 கிலோமீற்றர் தூரத்திற்கு கட்டணமாக 31 சதத்தையே புகையிரதத் திணைக்களம் அறவிட்டு வருகின்றது. இதனால் புகையிரதத் திணைக்களத்திற்கு பலகோடி ரூபாய் இழப்பீடு ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்தார். இதேவேளை ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் 2000 மில்லியன் ரூபாய் புகையிரதத் திணைக்களத்திற்கு இழப்பீடு ஏற்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## மத்திய மருந்தகம் இன்று திறப்பு


(வவுனியா)

பத்தாண்டுகளுக்குப் பின்னர் ஓமந்தை மத்திய மருந்தகம் இன்று காலை 10 மணிக்கு உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

ஜெயசிக்குறு நடவடிக்கையின் காரணமாக இந்த மருந்தகம் முற்றுமுழுதாகச் சேதமடைந்திருந்தது. வடக்கு கிழக்கு மாகாண அவசர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. வவுனியா மாவட்ட பிரதி மாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர் வைத்தியர்ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் வைபவத்திற்கு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள் உட்படப் பலர் அழைக்கப்பட்டுள்ளார்கள். நான்கு மில்லியன் ரூபாய் செலவில் இந்த மருந்தகம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது எனப் பணிப்பாளர் தெரிவித்தார்.

## 05ஆம் ஆண்டு நினைவு நாள்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 16 - 08 - 1974 | 07 - 02 - 2000 |



### மேஜர் குமரன்

### பொன்னம்பலம் சசிகரன்

### (நெல்லியடி கிழக்கு கரவெட்டி)

மண்ணின் விடியலுக்காய் விதையாகினாய்
காலங்கள் ஐந்தும் கடுகதியில் மறைந்தாலும்
கணமேனும் உன் நினைவு
எம்மைவிட்டு நீங்காது
எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அப்பா, அம்மா
தம்பி, தங்கையார்
கொழும்பு.

(5553)

## 2ஆம் வருட நினைவு நாள்

| ஜனனம் | வீரகாவியம் |
|---|---|
| 16 - 10 - 1980 | 07 - 02 - 2003 |



### மேஜர் பொதிகைத் தேவன்

### [சிவஞ்ஞானஸ் கந்த மூர்த்தி தயா பரன்]

இரண்டு ஆண்டுகள் கழிந்தாலும்
உன் நினைவு எமை விட்டு மறையாது

என்றும் உன் நினைவுடன்
குடும்பத்தினர்.

(5634)

## நெஞ்சம் மறவாத நினைவுகளுடன்.

45ஆம் நாள் நினைவு
08.02.2005..........
அழைப்பிதழ்..........



அமரர்
மங்கயற்கரசி நாகேசு.
பிறப்பு:-25.04.1942

இறப்பு:-26.12.2004



அமரர்
நாகேசு கருணாநிதி.
பிறப்பு:-26.11.1963

முல்லைத்தீவில் ஏற்பட்ட கடல் பூகம்பத்தின் போது சாவைத்தழுவிக்கொண்ட எங்கள் குடும்ப உறவுகளின் 45ஆம் நாள் நினைவு நிகழ்வு 08.02.2005 (செவ்வாய்) அன்று எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. நினைவு நிகழ்விலும், மதியபோசனத்திலும், கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அம்பாள் தோட்டம்
நாவற்காடு.
முள்ளியவளை.

அழைப்பு
குடும்பத்தினர்.

(சி-11238)

# 126புதிய போர் விமானங்களை இந்தியா வாங்கும்

## விமானப்படை தலைமைத் தளபதி தியாகி தெரிவிப்பு



பெங்களூரில் நடைபெற்றுவரும் விமானக் கண்காட்சியில் இடம்பெற்றுள்ள ரஷ்யாவின் மிக் 29 ரக விமானம் ஒன்று விண்ணில் எழும்பிய காட்சி.

(புதுடில்லி)

**இந்தியா புதிதாக 126போர் விமானங்களை வெளிநாடுகள் பலவற்றிட மிருந்து கொள்வனவு செய்யவுள்ளது. இத்தகவலை இந்திய விமானப் படையின் தலைமைத்தளபதி எஸ்.பி.தியாகி ராஜஸ்தான் மாநிலத்தின் கோடா நகரில் நேற்று முன்தினம் நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.**

இந்திய விமானப்படைக்கு 126போர் விமானங்களை வாங்குவதற்கு முடிவு செய்துள்ளோம். அதுபற்றி அமெரிக்கா, பிரான்ஸ், சுவீடன், ரஷ்யா ஆகிய நாடுகளுடன் பேரம் பேசி வருகிறோம் அந்த விமானங்களில் 66 விமானங்கள் ஜெட் பயிற்சி விமானங்கள், அதில் 24 விமானங்கள் இங்கிலாந்திடம் இருந்து வாங்கப்படும். முதல் போர் விமானம் இன்னும் 2 ஆண்டுகளில் இந்தியா வரும். அதன் விலை 150 கோடி ரூபாய் மேலும் சமீபத்தில் மிக் ரக விமானங்கள் அடுத்து அடுத்து விபத்து நடந்ததாக கூறுகிறார்கள் ஆனால் விமானத்தில் கோளாறு இல்லை அதை ஓட்டுபவர்கள் கவனக்குறைவால் நடந்த விபத்து. நானே மிக்ரக விமானத்தை 1000மணிநேரம் ஓட்டி இருக்கிறேன். எனக்கு எந்த விபத்தும் ஏற்பட்டது இல்லை அது பாதுகாப்பானது அதை தரை இறக்குவதற்கு எந்த சிபாரிசும் தேவையில்லை.

இவ்வாறு விமானப்படை தலைமைத் தளபதிஅங்கே மேலும் கூறியுள்ளார்.

# பாக்.தீவிரவாதிகளின் தளபதி காஷ்மீரில் சுட்டுக் கொலை

### இந்திய இராணுவ அதிகாரி தெரிவிப்பு

(புதுடில்லி)

காஷ்மீரில் நடந்த துப்பாக்கிச் சண்டையில் பாகிஸ்தான் தீவிரவாதிகளின் தளபதி ஒருவர்சுட்டுக் கொல்லப்பட்டதாக இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் மாநிலம் காம்பிர் மொகலா என்ற காட்டுப் பகுதியில் ஒளிந்திருந்த ஹிஜ் புல் முஜாகிதீன் தீவிரவாதிகளை இராணுவத்தினரும், பாதுகாப்புப் படையினரும் நேற்று முன்தினம் காலையில் சுற்றி வளைத்தனர். அப்போது இரு தரப்பிலும் நடந்த துப்பாக்கிச் சண்டையில் தீவிரவாதிகளின் தளபதி ஹம்சா தன்யாப் சுட்டுக் கொல்லப் பட்டார்.

பாகிஸ்தான் நாட்டில் மூல்தான் பகுதியைச் சேர்ந்தவர் இவர் அவர் கொல்லப்பட்ட இடத்திலி ருந்து ரி.56 ரக துப்பாக்கி ஒன்றும் 3 புத்தகங்கள், 7 கையெறி குண்டுகள்.160 தோட்டாக்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

பிச்சு என்கிற இம் தியாஸ் என்ற லஸ்கர் இ-தொய்பா தீவிரவாதி ஒருவரை பாதுகாப்புப் படையினர் கைது செய்தனர். அவரிடமிருந்து 190 தோட்டாக்கள், ஒரு வெடிகுண்டு பறிமுதல் செய்யப்பட்டது. என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் காளிகுப்பர் என்ற கிராமத்தில் கவுசல்குமார், புருசோத்தம், கனோஷ்தாஸ் ஆகிய 3 பேரை தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர். அவர்களில் கவுசல்குமாரை தீவிரவாதிகள் சுட்டுக் கொன்று விட்டனர். மற்ற 2பேரும் தப்பி வந்து இது பற்றி பொலிசில் தெரிவித்தனர். கவுசல் உடலை பொலிசார் மீட்டதோடு, தீவிரவாதிகளை தேடி வருகிறார்கள்.



சுனாமி தாக்குதல் நடந்து சுமார் 40 நாட்களுக்குப்பிறகு பூம்புகார் போக்குவரத்துக் கழகம் நேற்றுமுன்தினம் கன்னியாகுமரி விவேகானந்தர் பாறைக்கு படகை இயக்கியது. இதை தொடர்ந்து வெளி நாட்டு சுற்றுலா பயணிகள் உல்லாசமாக விவேகானந்தர் பாறைக்கு சென்று சுற்றிப்பார்த்த காட்சி.

# பீகாரில் ராப்ரிதேவி தலைமையில் மீண்டும் ஆட்சி அமைப்போம்

### லல்லு பிரசாத்யாதவ் சபதம்

(புதுடில்லி)

"பீகாரில் ஆட்சி அமைப்பது பற்றி வெளியாகும் கருத்துக் கணிப்புக்களை பொய்யாக்கி, மீண்டும் ராப்ரிதேவி தலைமையில் ஆட்சி அமைத்துக் காட்டுவோம்" என்று லல்லு பிரசாத்யாதவ் சபதம் ஏற்றார்.

பீகாரில் 3 ஆவது கட்டவாக்குப் பதிவு வருகிற 23 ஆம் திகதி நடக்கிறது. 93 தொகுதிகளுக்கான இந்த தேர்தலில் 86 தொகுதிகளுக்கான வேட்பாளர் பட்டியலை லல்லு பிரசாத் யாதவ் நேற்று முன்தினம் வெளியிட்டார். இத்துடன் மாநிலத்தில் மொத்தம் உள்ள 243 தொகுதிகளில் லல்லுகட்சி 215 தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தியுளது மீதியுள்ள 23 தொகுதிகளை, இடதுசாரி கட்சிகள் மற்றும் காங்கிரஸ் போன்ற கூட்டணி கட்சிகளுக்கு லல்லு பிரசாத் யாதவ் விட்டுக் கொடுத்து இருக்கிறார். ஆனால் கூட்டணி கட்சிகளுக்கான தொகுதிவாரி பட்டியல் விபரத்தை வெளியிட அவர் மறுத்து விட்டார். ஜார்க்கண்ட் மாநில 3ஆவது கட்ட தேர்தலுக்கான 16 வேட்பாளர் களையும் லல்லு நேற்று முன்தினம் அறிவித்தார்.

நிருபர்களுக்கு பேட்டி அளித்த லல்லு பிரசாத் வாக்குப் பதிவுக்கு முந்தைய, பிந்திய கருத்துக் கணிப்புகள் அனைத்தையும் பொய்யாக்கி மீண்டும் ராப்ரி தேவி அரசை அமைத்தே தீருவோம். எங்களுக்கு ஆதரவான முஸ்லிம்களின் வாக்கு வங்கியில் மாற்றம் ஏற் படும் என்று சிலர் கூறி வருகிறார்கள் அவர்களின் கதை நனவாகப்போவது இல்லை.

மாணவர்கள் கடத்தல் பற்றி நீதி விசாரணைக்கு உத்தரவிடுவதால் எந்தப் பயனும் இல்லை. எங்கள் காவல் துறையினர் சரியான நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இந்தக்கடத்தல் விவகாரத்தில் உண்மையான குற்றவாளிகளை கூண்டில் ஏற்றும் தகுதி அவர்களுக்கு உண்டு என்று கூறினார்.

## "இந்தியா டுடே" நடத்திய கருத்துக் கணிப்பில் தமிழக முதல்வர் 15 ஆவது இடத்தில்

இந்தியா டுடே நடத்திய கருத்துக்கணிப்பில் சிறந்த முதல்வர் பட்டியலில் தமிழக முதல்வர் ஜெயலலிதா 15ஆவது இடம் பெற்றார்.

கடந்த 2001ஆம் ஆண்டு முதல் பட்டியல் வெளியிடப்பட்டுவருகிறது. தற்போது 2005 பெப்ரவரி மாதத்திற்கான முதல்வர் தர வரிசை பட்டியலை இந்தியா டுடே இதழ் வெளியிட்டுள்ளது. இதில் சட்டீஸ்கர் முதல்வர் ராமன் சிங் 48 புள்ளிகள் பெற்று முதலிடத்தைப் பிடித்திருக்கிறார் 2ஆவது இடத்தை ஒரிசா முதல்வர் நவீன் பட்நாயக்கும் (46புள்ளி) 3ஆம் இடத்தை பஞ்சாப் முதல்வர் அம்ரீந்தர் சிங்கும் (44புள்ளி) பிடித்து உள்ளனர். இதேவேளை தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவிற்கு 2001ஆகஸ் 13ஆவது இடமும் 2002பெப் -16ஆவது இடம் இந்த கருத்துக்கணிப்பின் போது ஓ.பன்னீர் செல்வம் முதல்வராக இருந்தார். 2001 ஆகஸ். 13ஆவது இடமும், (2002பெப். 16ஆவது இடம், 2002ஆக -13ஆவது இடமும், 2003 பெப். 18ஆவது இடமும், 2003 செப்-17 ஆவது இடமும் 2004 பெப். 17ஆவது இடமும், 2004மே 18 ஆவது இடமும்,2004 செப் 19 ஆவது இடமும், 2005 பெப் 15ஆவது இடமும் கிடைத்துள்ளது.


முதலில் நடாத்தப்பட்ட கருத்துக் கணிப்புகளின் பின் தங்கியிருந்த பல முதல்வர்கள் திறமையாக செயற் பட்டு தற்போதைய கருத்துக் கணிப்பில் முதல்தர வரிசைக்கு உயர்ந்துள்ளனர்.

உதாரணமாக 2004 பெப்ரவரி கருத்துக்கணிப்பின்போது 13ஆவது இடத்தில் இருந்த சட்டீஸ்கர் முதல்வர் ராமன் சிங் தற்போது முதலிடத்தை எட்டிப்பிடித்துள்ளார்இதேபோன்று 2004பெப்ரவரி மற்றும் மே மாதக் கருத்துக் கணிப்புகளில் 14ஆவது இதில் இருந்த பஞ்சாப் முதல்வர் அம்ரீந்தர் சிங்.3ஆவது இடத்தைப் பிடித்திருக்கிறார். ஆனால் முதல்வர் ஜெயலலிதா மட்டும் தொடர்ச்சியாக கடைசி இடத்திலேயே இருப்பது குறிப்பிடத்தக்கது.

## வேட்பாளர் மீது துப்பாக்கிச் சூடு

சமீபத்தில் நடந்த காஷ்மீர் உள்ளாட்சி தேர்தலில் ஷேக் முகம்மது அமின் சுயேட்சையாக போட்டியிட்டார். ஜுனிமர் என்ற கிராமத்தில் வீட்டில் இருந்து அவரை, திடீரென வந்த ஒரு தீவிரவாத கும்பல் சரமாரியாக சுட்டு விட்டு ஓடி விட்டது. இதில் படுகாயம் அடைந்த அவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அப்துல்ஹமீது தார் என்ற முன்னாள் தீவிரவாதி ஒருவரையும், ஒரு தீவிரவாத கும்பல் சுட்டு விட்டு ஓடி விட்டது அவரும் வைத்திய சாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவருகிறார்.




பிரான்ஸ் நாட்டில் படிக்கும் சீக்கிய மாணவர்கள் தலைப்பாகை அணியக்கூடாது என்று தடைவிதிக்கஅந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளதற்கு எதிர்ப்புத் தெரிவித்து டில்லியில் சீக்கியர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இங்கே வெட்டவும்




நெஸ்பிறே பால்மா வாங்குங்கள்!

பால்மா பிரியர்களுக்கு கிளிநொச்சி அம்மன் களஞ்சியம் வழங்கும்

மாபெரும் பரிசுப்போட்டி

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்!

நெஸ்பிறே 400கிராம் பைக்கற்றின் மேல்ப்பகுதியை வெட்டிஅதன் பின்புறம் பெயர் விலாசம் ஆகியவற்றை எழுதிதினமும் கீழ்வரும் விலாசத்திற்கு அனுப்புவதன் மூலம் மாதத்தில்ஒவ்வொரு திங்கட்கிழமையும் ஒரு ஏசியா ஈருருளிக்கு உரிமையாளராகுங்கள்.இப்போட்டி பெப்ரவரி மாதம் 1ஆம் திகதிஆரம்பமாகி மறு அறிவித்தல் வரை நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வெற்றியாளரின் பெயர் விபரம் அடுத்து வரும் நாளிதழில் பிரசுரிக்கப்படும்.

வன்னிப்பகுதிக்கான முகவராண்மை பெற்றவர்கள்:

அம்மன் களஞ்சியம்

யாழ்சாலை, கிளிநொச்சி. தொ. பே:021-228 5852,5077

அம்மன் களஞ்சிய ஊழியர்கள் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

கிழமை தோறும் ஒரு ஏசியா ஈருருளி உரிமையாளராகுங்கள்!



அனுப்பவேண்டிய முகவரி:
நெஸ்பிறே பரிசுப்போட்டி
ஈழநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி.

இப்போட்டியில் வன்னிப்பகுதியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியும்.

(சி-11254)



வெற்றிக் கிண்ணத்துடன் அவுஸ் அணி வீரர்கள்.


## பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் ஷேவாக், காம்பிர் ஆரம்ப வீரர்கள்

**கங்குலி**

சொஹைப் அக்தரின் பவுண்சர் பந்து வீச்சில் எனக்குப் பயம் இல்லை. இது மாதிரியான பந்து வீச்சு ஆட்டத்தில் ஒரு அங்கமாகும். நமது தற்போதைய துடுப்பாட்டத்தைத் தொடர்ந்தால் பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் வென்று விடலாம். டெஸ்டில் ஷேவாக், காம்பிர் தொடக்க ஆட்டக் காரர்களாக ஆடுவார்கள். அதில் மாற்றம் இருக்காது இவ்வாறு கங்குலி கூறினார்.

## பாகிஸ்தானை 31 ஓட்டங்களால் தோற்கடித்து அவுஸ்திரேலியா வி.பி.கிண்ணத்தை சுவீகரித்தது






மூன்று நாடுகள் கலந்து கொண்ட வி.பி.முக்கோண கிண்ணத்தை அவுஸ்திரேலிய அணி கைப்பற்றியது.

சிட்னியில் நேற்று நடைபெற்ற இரண்டாவது இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணியை 31 ஓட்டங்களால் தோற்கடித்துஅவுஸ்திரேலியா வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்தது.

மூன்று போட்டிகள் கொண்ட இறுதிப்போட்டியில் முதலாவது போட்டியில் 18 ஓட்டங்களால் அவுஸ் வெற்றி பெற்றிருந்தது. இதன் மூலம் 2-0 என்ற நிலையில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதன்படி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 9 விக்கெட்டுக்களை இழந்து 239 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அவுஸ்திரேலியா எதிர்பார்த்த இலக்கை எட்ட விடாது பாகிஸ்தான் பந்து வீச்சாளர்கள் சிறப்பாகப் பந்து வீசி ஓட்ட எண்ணிக்கையை கட்டுப்படுத்தியபோதும் பாகிஸ்தான் ஆரம்ப துடுபாட்ட வீரர்கள் சிறப்பாக ஆடாததால் தோல்வியடைய நேர்ந்தது.

அவுஸ்திரேலிய துடுப்பாட்டத்தில் கில்கிறிஸ்ட் 40,கிளார்க் 38,பொண்டிங் 41,மாட்டீன் 43ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றனர். பந்து வீச்சில் நவீட்உல் ஹசன் ,ரசாக்,அப்ரிடி தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். வெற்றி இலக்கு நோக்கி ஆடிய பாகிஸ்தான் 45.4 ஓவரில் 208 ஓட்டங்களை மட்டும் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் யுகானா51,ராசாக் 43,அப்ரிடி 31 ஓட்டங்களை முறையே அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் 7.4 ஓவர்கள் பந்து வீசிய மெக்ராத் 27 ஓட்டங்களை கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். ஆட்ட நாயகனாகவும் அவரே தெரிவானார்.


## அதிக சிக்ஸர் அடித்ததில் அப்ரிடி புதிய சாதனை



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் அதிரடி ஆட்டக்காரர் அப்ரிடி ஒருநாள் போட்டியில் குறைந்த பந்தில் 'சதம்' அடித்த சாதனை வீரரான இவர் இன்னொரு சாதனை புரிந்துள்ளார்.


ஒரு நாள் போட்டியில் அதிக சிக்ஸர் அடித்தவர் என்ற சாதனையை அப்ரிடி படைத்தார். 3 நாடுகள் கிரிக்கெட்டில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் இறுதி ஆட்டத்தில் அவர் 26 ஓட்டங்கள் எடுத்தார். இதில் 3சிக்ஸசர்கள் அடங்கும். ஒரு நாள் போட்டியில் அவர் அத்தோடு 190 சிக்ஸர் அடித்துள்ளார். இதன் மூலம் ஜெயசூரியாவின் சாதனையை அப்ரிடி முறியடித்தார். ஜெயசூரியா 188 சிக்ஸர் அடித்ததே இதுவரை சாதனையாக இருந்தது.

## தப்பினார் ரசாக்



நடுவர் முடி வுக்கு அதிருப்தி தெரிவித்த பாகிஸ் தான் வீரர் அப்துல் ரசாக் தண்டனையில் இருந்து தப்பினார்.

அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் முத் தரப்புக் கிரிக்கெட் முதல் இறுதிப் போட்டி மெல்பேர்ன் நகரில் கடந்த வெள்ளியன்று நடந்தது. அவுஸ்திரேலிய அணி துடுப்பெடுத்தாடியபோது, அப்துல் ரசாக் பந்து வீச்சை வைட் என அறிவித்த நடுவரின் இந்த முடிவுக்கு அதிருப்தி தெரிவித்தார். ரசாக் இதன் மூலம் ஐ.சி.சி ஒழுங்கு விதி முறைகளை மீறியதாக ரசாக் மீது குற்றம் சாட்டப்பட்டது. அவரது அதிர்ஷ்டம்.... நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. ஐ.சி.சி குற்றச்சாட்டில் இருந்து ரசாக் விடுவிக்கப்படுவதாக நேற்று முன்தினம் அறிவித்தது.



டோக்கியோ ில் நேற்று நடைபெற்ற பான்-பசுபிக் டென்னிஸ் இறுதியாட்டத்தில் ரஷ்யாவின் இளம்புயல் மரியா சரபோவா, லிண்சே டெவன் போட்டை 6-1, 3-6, 7-6, (7-5) என்ற செட்டில் வென்று கிண்ணத்தைக் கைப்பற்றிய பின்னர் அவருடன் காட்சியளிக்கின்றார்.

## நான்காவது ஒருநாள் போட்டி தென்னாபிரிக்காவுக்கு அபார வெற்றி

தென்னாபிரிக்க-இங்கிலாந்து அணிகளுக்கிடையில் கேப்டவுனில் நேற்று நடைபெற்ற நான்காவது ஒரு நாள் போட்டியில் தென்னாபிரிக்க 108 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.




முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 5 விக்கெட்டுக்களை இழந்து 291 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் கிப்ஸ் சதமடித்தார். கலிஸ் 71 ஓட்டங்களையும், கிம்ப் நான்கு ஆறு ஓட்டம், நான்கு நான்கு ஓட்டம் அடங்கலாக 36 பந்துகளில் 57 ஓட்டங்களையும் பெற்றனர்.


பந்துவீச்சில் ஹார் மிசன், ஹொக், ஹபீர் அலி தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களை கைப்பற்றினர். இருவர் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தனர்.



பதிலுக்கு வெற்றி இலக்கு நோக்கி ஆடிய இங்கிலாந்து 41.2 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் பீற்றர்சன் 75 ஓட்டங்களையும், ஹைஸ்ஸ் 20 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். ரெஸ்கொதிக் 13, ஜோன்ஸ் 19 ஓட்டங்களுடனும் வோகன் ஓட்டமெதுவும் பெறாமலும் விரைவாக ஆட்டமிழந்தார். பந்து வீச்சில் நிற்றினி மூன்று விக்கெட்டுக்களையும், பொலக், போயே தலா இரண்டு விக்கெட்டுக் களையும் கைப்பற்றினர். ஏழு போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் மேற்படி வெற்றி மூலம் தென்னாபிரிக்கா அணி 2-1 என்ற நிலையில் முன்னிலை வகிக்கின்றது.

## தென்னாபிரிக்க அணியின் பயிற்சியாளர் பதவிக்கு ஸ்ரீவ்வோ போட்டியிடுகிறார்



அவுஸ்திரேலிய அணியின் சிறந்த டெஸ்ட் அணித் தலைவரான ஸ்ரீவ்வோ தென்னாபிரிக்காவின் பயிற்றுநராக வர போட்டியிடவுள்ளார் எனப் பத்திரிகை செய்தியொன்று தெரிவித்துள்ளது. இந்த பயிற்றுநர் பதவிக்காக அவுஸ்திரேலியாவின் மேலும் இரு வீரர்களான ஜெப்மார்ஷ், டொம் மூடி ஆகியோரும் போட்டியிடவிருக்கின்றனர்.

தற்போதைய பயிற்றுநராக றே ஜெனிங்க்ஸ் பணியாற்றுகின்றார். இவரின் பயிற்சியின் பின்னர் இந்தியா, இங்கிலாந்து நாடுகளுடனான போட்டிகளில் தென்னாபிரிக்கா வெற்றிபெறவில்லை. இதன் காரணமாக அணிக்கு புதிய பயிற்றுநரை நியமிக்க அந்நாட்டின் ஐக்கிய கிரிக்கெட் சபை முடிவெடுத்துள்ளது.

வோ 168 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்றதுடன் 57 போட்டிகளுக்குத் தலைமை வகித்துள்ளார். அவற்றுள் 41 போட்டிகளில் வெற்றியும் பெற்றுள்ளார்.

இந்தப் பதவிக்கு தென்னாபிரிக்க வீரர்கள் எவரும் போட்டியிடவில்லையா என்று கேட்டதற்கு அது பற்றி தெரிந்து கொள்ள ஆவலாய் இருப்பதாக வோவின் முகாமையாளர் றொபர்ட் ஜோஸ்க் தெரிவித்துள்ளார்.

## ஹைதராபாத் ஓபன் இன்று ஆரம்பம்




அகில இந்திய டென்னிஸ் மற்றும் ஆந்திர மாநில டென்னிஸ் சங்கமும் இணைந்து சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியை ஹைதராபாத்தில் நடத்துகின்றது. 'ஹைதராபாத் ஓபன்'என்று அழைக்கப்படும் இந்தப் போட்டி இன்று தொடங்கி 12ஆம் திகதி வரை நடக்கின்றது. தெற்காசியாவில் நடைபெறும் ஒரே சர்வதேச மகளிர் டென்னிஸ் ஆட்டம் இதுவாகும்.

முன்னாள் முதல் நிலைவீராங்கனையும், பல்வேறு கிராணட்சிலாம் பட்டங்களை வென்றவருமானமார்டினாநவரத்தினலோவா (அமெரிக்கா) இதில் பங்கேற்கிறார். அவர் இரட்டையர் ஆட்டத்தில் விளையாடுகிறார். முன்னாள் 4ஆம் நிலை வீராங்கனையான ஜெலீனா டோகிக் மற்றும் வெளிநாட்டு வீராங்கனைகள் இதில் பங்கேற்கிறார்கள். அவுஸ்திரேலிய ஓபனில் 3ஆவது சுற்று வரை நுழைந்து பெருமை சேர்த்த உள்ளூர் வீராங்கனையான சானியா மிர்சாவும், இதில் விளையாடுகிறார்.



பெங்களூரில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட ராகுல்ராவிட் சிறுவர்களுக்கு 'ஆட்டோகிராப்' போடுவதை படத்தில் காணலாம்.

## சுனாமி நலநிதி கால்பந்துப் போட்டி றொனால்டோ உட்பட ஐவர் இல்லை




சுனாமி கண்காட்சி கால்பந்துப் போட்டியில் றொனால்டோ உள்ளிட்ட ஐந்து முன்னணி வீரர்கள் இடம் பெறவில்லை.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிதிதிரட்ட கண்காட்சி கால்பந்துப் போட்டி ஒன்றை நடத்த சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு (பீபா) முன்வந்துள்ளது. இதில் றொனால்டினோ (பிரேசில்),ஆன்ட்ரி ஷெவ்சென்கோ (உத்ரைன்) தலைமை யிலான அணிகள் மோதுகின்றன. இதற்காக டேவிட் பெக்காம்,தியரி ஹென்றி, ஜிடேன்,றொனால்டோ ஆகிய உலகின் முன்னணி வீரர்கள் 52 பேர் கொண்ட உத்தேச அணிகள் சமீபத்தில் அறிவிக்கப்பட்டன. இதிலிருந்து 40 பேர் கொண்ட இரு அணிகள் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டன.

பிரேசிலின் நட்சத்திர வீரர்களான றொனால்டோ, அட்ரியானோ,இத்தாலியின் ரோபர்டோ பாகியோ,பிரான்சின் டோட்டி, செக்குடியரசின் பாவல் நிட்வெட் ஆகியோர் அணியில் சேர்க்கப்படவில்லை. இப் போட்டி வரும் பெப்ரவரி 15 இல் ஸ்பெயினின் பார்சிலோனா நகரில் நடக்கிறது.



## சிந்தனைக்கு



விடுதலைப் போராட்டம் என்பது இரத்தம் சிந்தும் ஒரு ரணகளம்.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 07-02-2005



தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## வழமை போலவே அரசு!

பொதுக் கட்டமைப்பு நிறுவுவது எத்தனைதூரம சாத்தியமானது என்பதை தற்பொழுது எங்களால் கூறமுடியாது. ஏனெனில் அரசாங்கம் புதுப்புது நிபந்தனைகளை விதித்துக் கொண்டிருக்கின்றதேயொழிய ஒரு பொதுக் கட்டமைப்பை நிறுவுவதற்கு மனப்பூர்வமாக முன்வருவதாகத் தெரியவில்லை என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் அவர்கள் வெளிப்படுத்தியுள்ள நம்பிக்கையீனம், சுனாமி அனர்த்தத்தினால் பேரழிவைச் சந்தித்துள்ள தமிழ் மக்களுக்கு நிவாரணங்கள், மீள்கட்டுமான உதவிகள் எட்டாக்கனி ஆகிவிடுமோ என்ற சந்தேகத்தையே ஏற்படுத்துவதாய் உள்ளது.

அரச அதிகாரத்தில் இருந்து இயற்கை அனர்த்தங்களினால் ஏற்பட்ட அழிவுகளுக்கான நிவாரண உதவிகள் வரை எதையுமே சிறிலங்கா அரசாங்கம் தமிழ் மக்களுக்குரியதைப் பகிர்ந்தளிக்கத்தயாராக இருந்ததில்லை. தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டமும் இதனை அடியொற்றியதே ஆகும். ஆனால் சுமார் 20 வருடங்கள் நீடித்த ஆயுதப் போர்ாட்டம் யுத்த நிறுத்தத்தின் மூலம் இடைநிறுத்தப்பட்டுள்ள வேளையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தின் போது கூட அழிவுகளுக்கான நிவாரண உதவிகளைச் சம அளவில் பகிர்ந்தளிக்க அரசு தயாராக இல்லை.

சுனாமியினால் பாரிய அனர்த்தம் ஏற்பட்டு 40 நாட்கள் கடந்து விட்ட நிலையிலும், தமிழர் தாயகப்பகுதியில் மேற் கொள்ள வேண்டிய மீள் கட்டுமானப் பணிக்கான செயற்பாடுகள்எதனையும் சிறிலங்கா அரசாங்கம் ஆரம்பிக்க வில்லை. இத்தனைக்கும் காலி போன்ற சிங்களப் பிரதேசங்களில் சர்வதேச நிதியுதவியுடனான மீள் கட்டமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன.

இலங்கையில் இத்தகைய ஏற்றத் தாழ்வுகள் இடம்பெறும் என்பது முன்கூட்டியே உணரப்பட்டதன் விளைவே! அதாவது கடந்த கால அனுபவத்தின் காரணமாகவே தமிழர் தாயகத்தில் மீள் கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கென பொதுக் கட்ட மைப்பு ஒன்று உருவாக்கப்படுதல் வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

ஆனால் அரசாங்கத் தரப்பு இவ் விடயத்தில் முனைப்புடன் செயற்படுவதாக இல்லை. அரசாங்கத்தைப் பொறுத்து தமிழர் தாயகத்தில் மீள் நிர்மாணம் என்பது அவசியமானதாகவோ காட்டாயமானதாகவோ இல்லை அவர்களைப் பொறுத்தவரை தமிழர் தாயகத்தில் அரசாங்கம் மீள் கட்டுமானப் பணிகளில் ஈடுபடுகின்றது என்பதை வெளிப்படுத்தினால் மட்டுமே போதுமானதாகும்.

ஏனெனில் சர்வதேச நாடுகள் மற்றும் அமைப்புக்களிடம் இருந்து நிதியுதவிகளை சீரான முறையில் பெற்றுக் கொள்வதற்கு இது அவசியமானதாகவுள்ளது. அதிலும் ஏனெனில் அண்மைய காலத்தில் தமிழர் தாயகத்திலும் அபிவிருத்தி மற்றும் புனர் நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளவேண்டும் எனச் சர்வதேச நாடுகள் அபிப்பிராயம் கொண்டுள்ளதோடு அதனை அரசிடம் வலியுறுத்தியும் வருகின்றன.

ஆனால் தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் உலக நாடுகளிடம் இருந்து பெற்றுக்கொண்டுள்ள நிதியுதவிகளை பகிர்ந்தளிக்கும் என நாம் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் ஐ.ம.சு முன்னணி அரசாங்கம் ஏற்கனவே தமிழர் தாயகப்பகுதியில் புனர் நிர்மானப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டி வந்து விடும் என்பதற்காகவே டோக்கியோ மாநாட்டு நிதிகளைப் பெற்றுக் கொள்ளும் முயற்சியை கூட கைவிட்டு இருந்தது. இந்நிலையில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பிரதேசத்திற்கு நிதியுதவிகளை பகிர்ந்தளிக்க முன் வருவார்களா என்பது கோள்விக்குரியதே.

இன்று அரசாங்கத் தரப்பிலுள்ள ஜே.வி.பியினர் இவ்விடயம் தொடர்பாக ஓளரவு மௌனம் சார்தித்து வருகின்றமை என்பது இப்பொதுக்கட்டமைப்பு உருவாக்குவதற்கான வாய்ப்புக்களிலுள்ள சந்தேகமும் தற்போது கிடைத்துவரும் சர்வதேச நிதியுதவியுமே ஆகும். அதாவது இன்று தமிழர் தாயகத்திற்கு நிதி பகிர்ந்தளித்தலுக்கு எதிராக ஜே.வி.பி. குரல் எழுப்புமானால் அரசாங்கத்திற்கு கிடைக்கப்பெறும் உதவிகள் பெரியளவில் குறைவடைவதற்கு வாய்ப்புக்கள் மிகவும் அதிகமாகும். இதனை ஜே.வி.பியினரின் இவ்வணுகுமுறையை அமெரிக்கா துருப்புக்களை அனுப் பிவைத்த போதும் மௌனம் சாதித்ததில் இருந்தே புரிந்து கொள்ள முடியும்

இந் நிலையில் அரசாங்கம் வழமைபோலவே கிடைக்கப் பெறும் நிதியுதவிகளுக்காகவே வடக்குக் கிழக்கு மீள் கட்டுமானம் பற்றியும்பேசுகின்றது. அத்தோடு அரசாங்கம் - புலிகளுக்கிடையிலான பேச்சுவார்த்தைகள் முன்னேற்றம் கண்டு வருவதாகவும் விரைவில் பொது கட்டமைப்பு ஒன்று உருவாகலாம் என்ற நம்பிக்கையும் உருவாக்கவே முற்பட்டு நிற்கின்றது. ஆனால் சுனாமியின் பின்பும் சிறிலங்கா அரசாங்கத்தின் வளமையான நடவடிக்கைகளில் மாற்றம் எதுவும் ஏற்பட்டதாகவும் இல்லை. ஆகையினால் சிறிலங்கா அரசாங்கத்திற்கு மனிதாபிமான உதவிகளையும் , மீள் கட்டுமானத்திற்கான உதவிகளையும் வழங்கும் நாடுகளுமே, அமைப்புக்களுமே இவ்விடயத்தில் கவனம் செலுத்துதல் வேண்டும் ஆனால் அரசாங்கம் தமிழர் தாயகத்துக்கு நேரடியாக நிதியுதவிகள் சென்றடைவதற்கு இடையூறாக அரசியல் யாப்பை துக்கிப் பிடித்தல் கூடும். அவ்வாறு அரசாங்கம் அரசியல் யாப்பை துக்கிப் பிடிக்குமேயானால் இலங்கையில சுனாமி அனர்த்த மீள் கட்டுமான நடவடிக்கைகளில் இருந்து இனப் பிரச்சினைக்கான தீர்வு வரை எதனையுமே மேற் கொள்ள முடியாது போகும். இந் நிலையில் இலங்கையில் இரு அரசியல் யாப்புக்கள் அமுலாவது தவிர்க்க முடியாததாகிவிடும். அதாவது இரு நாடுகளுக்கான அரசியல் யாப்புக்கள் தவிர்க்கமுடியாததாகிவிடும்.

# உதவிகள் கிடைக்காத நிலை தொடரின் மக்கள் போராட்டம் வெடிக்கும்

### -தமிழ்க் கூட்டமைப்பு பா.உ.சிவசக்தி ஆனந்தன்

சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவென சர்வதேச சமூகத்திடமிருந்து கிடைத்துள்ள உதவிகள் வடக்கு கிழக்கில் எமது பிரதேசத்தைச் சேர்ந்த மக்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை.

இந்நிலை தொடருமானால் உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் மக்கள் போராட்டம் வெடிக்கும் என வன்னி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார். சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களின் 41ஆவது நாள் நினைவு நாள் நேற்று செட்டிகுளம் பிரிவில் நேரியகுளம் சிறிசித்தி விநாயகர் ஆலயத்தில் இந்து இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் காலை 10 மணிக்கு நடைபெற்றது. இவ் வைபவத்தில் கலந்துகொண்டு பேசும்போதே மேற்கண்டவாறு சிவசக்தி ஆனந்தன் குறிப்பிட்டார். எங்களுடைய வடக்கு கிழக்கு கரையோர மாவட்டங்கள் பெரிதும் சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டுள்ளது. உலக நாடுகளிலிருந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கெனப் பெருமளவு உதவிப் பொருட்கள் வந்து சேர்ந்துள்ளது. ஆனால் அவை யாவும் தெற்கே உள்ள மக்களுக்கே விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. பாதிக்கப்பட்ட எங்களுடைய மக்களுக்குக் கிடைத்துள்ள சர்வதேச சமூகத்தின் உதவிகளை பகிர்ந்தளிக்க அரசு நடவடிக்கை எடுக்கத் தவறின் எமது மக்கள் பொங்கி எழுந்து போராட்டங்களை நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படும் எனவும் அவர் கூறினார். வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர்,வினோ நோகராதலிங்கம், வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப் பாளர்

# இந்திய–சிறில. பாதுகாப்பு ஒப்பந்தம் இந்திய உயர் மட்டக்குழு பேச்சுவார்த்தை?

இந்திய - சிறிலங்கா பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பில் இந்தியாவின் உயர்மட்டப் பாதுகாப்புக் குழு ஒன்று இலங்கையில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளதாக செய்தி ஒன்று வெளியாகியுள்ளது.

இந்தக்குழு அண்மையில் சனாதிபதி செயலகத்தில் ஒப்பந்தம் தொடர்பான முக்கிய பேச்சுக்களில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. எனினும் இதனை இந்திய ராஜதந்திரி ஒருவர் முற்றிலுமாக மறுத்துள்ளார்.

தமது அறிவுக்கெட்டிய வரை இவ்வாறான குழு ஒன்று இலங்கைக்கு விஜயம் செய்ய வில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை ஏற்கனவே இந்த ஒப்பந்தம் கையெழுத்திடவிருந்தபோதும், தமிழ் நாட்டு அரசியலின் அழுத்தம் காரணமாக இந்திய மத்திய அரசாங்கம் அதனைப் பின்தள்ளிவைத்தமை இங்கு நினைவுகூரத்தக்கது.(32)

# சுனாமியால் சிறிதும் பாதிக்கப்படாத நிட்டம்புவவிற்கு பெருமளவு நிவாரணப்பொருட்கள்

### –மேலிடத்து உத்தரவு என அரச அதிபர் தெரிவிப்பு

சுனாமியால் சிறிதும் பாதிக்கப்படாத அத்தனகல தொகுதியிலுள்ள நிட்டம்புவ பிரதேச மக்களுக்கு சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கவென அரசிடம் கையளிக்கப்பட்ட பெருந்தொகையான பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன உடுபுடவைகள், உணவுப்பொருட்கள் என்பன இவற்றில் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக அப்பிரதேச அரசாங்க அதிபர் விளக்கமளிக்கையில் மேலிடத்திலிருந்து கிடைத்த உத்தரவின் பேரிலேயே இவ்வாறு பொருட்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இப்பகுதி பண்டாரநாயக்க குடும்பத்தின் சொந்த தொகுதி என்பதும் இங்கு பெருமளவான சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள் இருப்பதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

# போலியான தகவல்களைச் சமர்ப்பித்து நிவாரணங்கள் பெறுவோருக்கு எச்சரிக்கை

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட போலியான தகவல்களைச் சமர்ப்பித்து நிவாரணங்களைப் பெற்றுக் கொள்பவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திலக் ரணவிராஜா தெரிவித்தார்.

இவ்வாறு மோசடிகள் செய்தவர்கள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். விசேட அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று இந்த விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. பிரதேச செயலக மட்டத்தில் இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதேவேளை கிராம சேவை உத்தியோகஸ்த்தர்கள் சிலருக்கும் இவ்வாறான மோசடிகளுடன் தொடர்புள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளதாகத் திலக்ரணவிராஜா மேலும் தெரிவித்தார்.

# நிறைவேற்று அதிகார சனாதிபதி முறையை மாற்றத்துடன் நீடிக்க ஐ.தே.க.விருப்பம்

நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையில் மாற்றங்கள் செய்து சனாதிபதி முறையை நீடிப்பது கட்சியின் கொள்கைத் திட்டங்களில் ஒன்று என ஐக்கிய தேசியக் கட்சி அரசியல் பீடம் தெரிவித்துள்ளது.

நிறைவேற்று அதிகாரங்களில் மாற்றங்கள் மற்றும் யாப்பினைப் பலப்படுத்துவது மற்றும் தேர்தல் முறைகளில் மாற்றங்கள் செய்வது போன்றவைகள் அடங்கும் எனவும் சனாதிபதி முறையை இரத்துச் செய்வதற்கு ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவு வழங்காதெனவும் அரசியல் பீடம் தெரிவித்துள்ளது.

# கைதாகியுள்ள பாதாள உலகக் குழு முக்கியஸ்தரின் குறிப்பேட்டில் 5 அமைச்சர்களின் தொடர்பிலக்கம்

பொலிசாரால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள பாதாள உலகக் குழு முக்கியஸ்தரின் தினக்குறிப்புகளில் 5 அமைச்சர்களினதும், 2 முன்னாள், அமைச்சர்களதும் தொடர்பிலக்கங்கள் இருப்பதாகப் பொலிஸ் தரப்புதெரிவித்துள்ளது. மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவின் கொலையுடன் தொடர்பு பட்டுள்ளதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள பாதாள. உலகக் குழுவைச் சோந்த பொட்ட நவ்பர் என்று அழைக்கப்படும் மொகமட் நியாஸ் நவ்பர் மற்றும் பல்வேறுகொலை, கொள்ளைச் சம்பவங்களின பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளவம் பொட ஆகியோரின் தினக்குறிப்பேடுகளில் இருந்தே இந்த விபரங்கள் பெறப்பட்டுள்ளதாக ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. நவ்பரின் தினக் குறிப்பேட்டில் சுற்றுலாத்துறை அமைச்சர் அனுராபண்டாரநாயக்காவின் தொடர்பிலக்கங்கள் இருப்பதாகவும், பம்படவின் தினக் குறிப்பேட்டில் அமைச்சர்களான மங்கள சமரவீர,மைத்திரிபால சிறிசேன ஆகியோரின் தொலை பேசி இலக்கங்கள் இருந்துள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின்போது அமைச்சர்களாகப் பதவிவகித்த மஹ்ரூப் மற்றும் ஜோன் அமரதுங்க ஆகியோரின் தொலைபேசி இலக்கங்கள் நவ்பரின் தினக்குறிப் பேட்டில் காணப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.இந்த தினக் குறிப்பேடுகள் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவின் நேரடிக் கண் காணிப்பில் வைக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. (32)

# பாதிக்கப்பட்டோருக்கு அரசு வழங்கிய காசோலை பணமின்றித் திரும்பியது

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் வழங்கிய நிவாரண உதவி காசோலைகள் பணம் இல்லாத நிலையில் திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 5000 ரூபா ஆரம்ப நிவாரணமாக அரசாங்கத்தால் வழங்கப்பட்டது. இதற்கென வழங்கப்பட்ட காசோலை வங்கியில் பணம் இல்லாமையால் மாற்றலாகாமல் திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. காலி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட காசோலைகளே இவ்வாறு திரும்பியுள்ளதாக ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (32)

### —முல்லைத்தீவு மாவட்டத்தில்—

# பாதிக்கப்பட்ட 15 சிறார்களுக்கு 10 ஆயிரம் ரூபா வைப்புப் புத்தகம்

(அலுவல செய்தியாளர்)

முல்லைத்தீவு பகுதியில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு தாயையும் தந்தையையும் இழந்த 15 குழந்தைகளுக்கு தமிழீழ வைப்பகத்தில் ரூபா 10,000 வைப்பிலிடப்பட்ட புத்தகம் கையளிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 11.30 மணியளவில் முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தில் நடைபெற்ற மேற்படி கையளிப்பு நிகழ்வு சமாசத் தலைவர் அ.மரியராசா தலைமையில் நடைபெற்றது.

சிறார்களுக்கென நிதியினை கனடா வாசியான சுரேஸ் 10 பேருக்கு ரூபா 10 ஆயிரம்படி மொத்தம் ஒரு இலட்சம் ரூபாவை வழங்கினார்.

ஏனைய ஐந்து சிறுவர்களுக்கும் திக்கம் மத்திய சனசமூக நிலைய இளைஞர்கள் 10,000 ரூபா வீதம் மொத்தம் 50 ஆயிரம் ரூபாவை வழங்கினர்கள்.

இந்நிகழ்வில் சமாசப் பணியாளர்கள் பாதிக்கப்பட்ட சிறார்கள் என பலர் கலந்துகொண்டனர். (கு,ச,20)

### அவரசகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி-

# மக்களின் வாகனங்கள், கட்டடங்கள் படையினர், அதிகாரிகளால் கையேற்பு

அவசரகால சட்ட நடைமுறைகளைப் பயன்படுத்தி பொதுமக்களின் வாகனங்கள் மற்றும் கட்டடங்களை சமூக சேவை அதிகாரிகளும் படைத் தரப்பினரும் தொடர்ந்தும் கையேற்று வருவதாக பலவேறு முறைப் பாடுகள் கிடைத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதம் 4ம் திகதி சனாதிபதியால் அவசரகால சட்டம் அமுல்செய்யப்பட்டது.

14 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் இதற்கான அனுமதி பெறப்படவேண்டும் என அரசியலமைப்பு சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் ஒரு மாதம் கடந்து விட்டபோதிலும் பாராளுமனற அங்கீகாரம் பெறப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (32)

# அவசர காலச் சட்டம் குறித்து பாராளுமன்றத்துக்கு அறிவிக்கப்படும்

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பாராளுமன்றம் மீண்டும் கூடும் போது அவசரகால சட்டம் தொடர்பில் அரசாங்கம் பாராளுமன்றத்தில் அறிவித்தல் ஒன்றை வெளியிடும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள இராணுவப் பேச்சாளர் சுனாமியால் பாதிக்கப்பட்ட 14 மாவட்டங்களில் இந்தச் சட்டம் நடைமுறையில் இருப்பதாகவும் மனிதாபிமான பணிகளை மேற்கொள்வதற்கு இந்தச் சட்டம் உதவியாக அமைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (32)

**சுனாமி...**செயற்பாடுகளை பாராளுமன்றத்தில் விமர்சிக்க வேண்டாம் என மற்றுமொரு பிரிவினர் கருத்து வெளியிட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. இதே சமயம் இந்த விடயம் தொடர்பில் 9 உறுப்பினர்களை கொண்ட கட்சியின் உயர் பீடம் இறுதி முடிவினை அறிவிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அண்மைக்காலமாக அரசாங்கம் தம்மை ஓரம்கட்டும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாக ஜே.வி.பி உறுப்பினர்கள் விசனம் தெரிவித்து வருவதுடன் இந்த விடயத்தில் கட்சித் தலைமை தீக்கமான முடிவொன்றை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. திருகோணமலையில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் ஆளும் கட்சியின் மாவட்ட அமைப்பாளரான ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினரான ஜெயந்த விஜயசேகர அழைக்கப்படாத நிலையில் சுதந்திரக் கட்சியின் சார்பில் அமைச்சர் ஒருவர் கலந்து கொண்டமையானது. அரசாங்கம் ஜே.வி.பியை ஓரம் கட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதை தெளிவாக எடுத்து காட்டுவதாகவும் ஜே.வி.பியினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.(32)

**சிறில....**

னவை அனுப்பிவைக்குமாறு இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரக பாதுகாப்ப அதிகாரி கேணல் ரிச்சாட் கிரிவின் பாதுகாப்பு அமைச்சகத்திடம் வலியுறுத்தியதாகவும் தெரியவந்துள்ளது. அமெரிக்க நெருக்கடியினை அடுத்து பிரிகேடியர் ஹெந்த விதாரன இந்தப் பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை இராணுவ புலனாய்வுப் பிரிவை சோந்த மற்றுமொருலெப்ரின்ட் கேணல் தர அதிகாரியும் இந்த பயிற்சிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.உள்ளக புலனாய்வு அதிகாரியான கீர்த்தி கஜநாயக்கா இந்தப் பயிற்சிக்கென அமெரிக்கா செல்லவுள்ளதாகத் தெரியவருகின்றது.

வெளிநாடுகளில் நடைபெறும் பயிற்சிகளில் கலந்து கொள்வதற்குப் புலனாய்வுத் துறைக்கு பொறுப்பான அதிகாரிகள் செல்வதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. புலனாய்வு அதிகாரிகளைத் தெரிவு செய்து அழைக்கும் அமெரிக்க நடவடிக்கை தமக்கு கவலை அளிப்பதாக இந்தியா தெரிவித்துள்ளது. இந்தத் தகவலை ஆங்கில இணையத்தளம் ஒன்று வெளியிட்டுள்ளது. (32)

**இந்திய....**

மல் இருந்து வருவது குறித்து தாம் ஆச்சரியப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக எரிபொருள் துறை அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவை தொடர்பு கொண்ட போது முன்னைய அரசாங்கம் பாரத் பெற்றோலியத்துக்கு பெற்றோலிய கூட்டுதாபனத்தின் முழுமைப்பங்குகளையும் விற்பனை செய்ய ஏற்பாடுகளைச் செய்திருந்தது எனினும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் ஏற்கனவே செய்யப்பட்ட ஒப்பந்தம் காரணமாக சிறிய தொகைப் பங்கினையே பாரத் நிறுவனத்துக்கு விற்பனை செய்தது எனக் குறிப்பிட்டார். இதேவேளை பாரத் பெற்றோலியத்திற்கு இலங்கையில் விநியோக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளமையை பெற்றோலிய தொழிற்சங்கம் ஆட்சேபித்துள்ளது

**தேசியத் தலைவரின்.....**

யோகம் செய்ய முற்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் இவ்வாறான சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. எமது தலைவரின் உருவப் படத்தை அகற்றி வீசியுள்ளார்கள். இது வன்மையாக கண்டிக்கப்பட வேண்டிய விடயம். இதனால் பொது மக்கள் பீதியடைந்துள்ளார்கள். இதற்கு பின்னணியில் ஜே.வி.பி. இருக்கின்றது. கடந்த வாரம் அழையாத விருந்தாளியாக பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்ட ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் வசந்த பியதிஸ்ஸ இந்தப் படத்தை அகற்றுவதற்கு 7 நாட்கள் கால அவகாசம் வழங்கி எச்சரிக்கை விடுத்துச் சென்றார். இப்படியான அடாவடித்தனங்களும், மனிதாபிமானம் அற்ற செயல்களும் மேலும் தொடருமானால் அதனால் ஏற்படும் பாரிய விளைவுகளை சிறிலங்கா அரசாங்கம் தான் பொறுப்பேற்க வேண்டும் என்றும், இது பற்றி அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மலேசிய வைத்தியர்கள் கிளி,புதுக்குடியிருப்பில் சிகிச்சை

மலேசியாவிலிருந்து வருகை தந்துள்ள வைத்தியர் ரூபநாதன் அவர்களினால் சர்மநோய்க்கான சிகிச்சைகளும் பரிந்துரைகளும் எதிர்வரும் 8.2.2005 செவ்வாய், 09.02.2005 புதன் ஆகிய நாட்களில் கிளி.Dr பொன்னம்பலம் மருத்துவமனையிலும், 10.02.2005 வியாழன், 11.02.2005 வெள்ளி ஆகிய நாட் களில் புதுக்குடியிருப்பு Dr பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையிலும், நடைபெற வுள்ளது. சிகிச்சை தேவைப்படும் அனைவரும் குறிப்பிடப்பட்ட திகதிகளில் காலை 8.00 மணிதொடக்கம் பிற்பகல் 2.00 மணிவரையும் நடைபெறும்.

# பாதிக்கப்பட்டோருக்கு வழங்க ஒதுக்கிய நிதியை மத்திய வங்கி தனியார் நிதிநிறுவனங்களுக்கு வழங்கியது

சுனாமியினால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதிகளை மத்திய வங்கி தனியார் நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளதாக ஊடக தகவல் ஒன்று தெரிவித்துள்ளது.

இதன்படி நீண்ட கால தவணையில் கடன்களை வழங்கி வரும் 46 நிறுவனங்கள் அவற்றை மத்திய வங்கியிடம் இருந்து 3 வீத வட்டிக்கு பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இதனை அந்த நிறுவனங்கள் 14 வீத வட்டிக்கு தனிப்பட்ட வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களுக்கு வழங்கியுள்ளன.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட தனியார் ஏற்கனவே வங்கிகளில் கடன்களை பெற்றிருந்தால் அந்த கடன்களை மீள அறவிடாமல் இருக்கும் முகமாக உலக வங்கி சுமார் 5000 ஆயிரம் மில்லியன் ரூபாவை மத்திய வங்கிக்கு வழங்கியிருந்தது.

இந்த நிலையில் குறிப்பிட்ட நிதியையே மத்திய வங்கி நீண்ட கால குத்தகை நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை சுனாமியின் போது நாடளாவிய ரீதியில் சுமார் ஒருகோடி ரூபா வரையிலான திரவப்பணம் கடல் நீரால் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. (32)

# எதிர்க் கட்சித் தலைவர் ஐரோப்பாவிலிருந்து திரும்பினார்

பல ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த சிறிலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனது விஜயத்தை முடித்துக்கொண்டு இன்று நாடு திரும்பியுள்ளார்.

வெளிநாட்டு விஜயத்தில் கூடுதலான நாட்களை நோர்வேயில் கழித்த எதிர்க்கட்சித் தலைவர் அங்கு நடத்திய பேச்சுவார்த்தைகளில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணங்களை பெற்றுக்கொடுப்பது தொடர்பாக விசேட கவனம் செலுத்தியுள்ளார். இவர் இந்த விஜயத்தின்போது பெல்ஜியம் நாட்டிற்கும் விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சுனாமியால் உயிரிழந்தோரின் 5 சடலங்கள் கண்டுபிடிப்பு

கடந்த 48 மணிநேரத்திற்குள் ஆழிப்பேரலையினால் உயிரிழந்ததாகக் கூறப்படும் 5 பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. திருகோணமலை பகுதியில் பெண் உட்பட 3 பேரின் சடலங்கள் நேற்று மாலை கரையொதுங்கியுள்ளது. மட்டக்களப்பு ஏறாவூரில் 12 வயது மதிக்கத்தக்க சிறுவரொருவரின் சடலமும் கரையொதுங்கியுள்ளது. இந்தச் சடலங்கள் உருக்குலைந்திருப்பதால் அடையாளம் காணப்படவில்லை. இதேவேளை பொத்துவில் அறுகம்பை பிரதேசத்தில் கட்டட இடி பாடுகளுக்குள் இருந்து 75 வயதுடைய முத்தையா சிவலிங்கம் என்பவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. கட்டட இடிபாடுகளை அகற்றும் பணிகளில் ஈடுபட்டிருந்த சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரால் இந்த சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

**சந்திரிகா....**

பீடம் எடுக்கம் எந்த முடிவிலும் எமக்கு நம்பிக்கை இல்லை. ஆகவே இன்றைய சந்திப்பில் நாம் கலந்து கொள்ளப் போவதில்லை என்றார்.(32)

**லிங்க....**

பகுதியில் 3 ஏக்கர் காணிகளை சிறிலங்கா அரசாங்கம் வழங்கு வதற்கு சம்மதம் தெரிவித்து வீட்டு உரிமையாளர்களை காணிகளில் இருந்த வெளியேறுமாறு பட்டணமும் சூழலும் பிரதேச செயலகம் முன்னர் கேட்டபோதிலும் இது வரை காணிகள் எதுவும் ஒதுக்கப் படவில்லை. இது இவ்வாறு இருக்க ஆழிப்பேரலை அனர்த்தத் தைக் காரணம் காட்டி இராணுவம் அந்த மக்களை மீண்டும் வெளி யேற்ற முயற்சிகள் எடுத்து வரு கின்றது. இம்முயற்சிக்கு கண்டனம் தெரிவித்து மக்கள் மன்றம் சிறிலங்கா இராணுவத்தின் 22வது படைப்பிரிவு தளபதிக்கு மகஜர் ஒன்றினை அனுப்புவதற்காக கூடடம் ஒன்றினை நேற்று முன்தினம் லிங்கநகர் நூல் நிலையத்தில் கூட்டி அப்பகுதி வாழ் மக்களிடம் கையெழுத்து சேகரித்தனர்.


## காணி விற்பனைக்குண்டு

கிளிநொச்சி இரத்தினபுரத்தில் கிளிநொச்சி நகரக்குளம் (5அடி வான்) புதுப்பாலம் சந்திக்கும், இரத்தினபுரம் மாதா கோவிலுக்கும் இடையில் உள்ள அரை ஏக்கர் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
110/2, திருவையாறு,
கிளிநொச்சி.

தொலைபேசி இலக்கம்:-
024-2224247
0776-059672

(கி.11256)


...ல் 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது